# திருக்கோயில்



ஆகஸ்ட்
2003

விலை
ரூ 7.00





முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடான திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 6.7.03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமிகு சோமசுந்தரம் அவர்கள், அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்கள், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு ஆர். முத்துசாமி, பி.எஸ்.சி., பி.எல் அவர்கள் திருக்குட நீராட்டு விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




தனி இதழ் : ரூ. 7.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 75.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000.00

மாலை 45 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சுபானு - ஆவணி | ஆகஸ்ட்டு 2003 | மணி 8



## சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

## ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,

எம்.ஏ., பி.எச்.டி

## ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திருமிகு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பி.எல்.

கூடுதல் ஆணையாளர்

திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


<u>முகப்பு</u>

**சுவாமிமலை**

**அருள்மிகு சுவாமிநாத சுவாமி**

## பொருளடக்கம்


**அருணகிரிநாதர்** - திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அரசுச் செயலாளர்

**திருமந்திர உபதேசம்** - திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

**ஆன்மீகம்** - திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஓய்வு)

**திருத்தணிகை மகாகும்பாபிஷேகம் : சிறப்புச் செய்திகள்** - ஆர். முத்துசாமி, பி.எஸ்.சி., பி.எல்.

**நீள்சௌக்கியம் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு அருளும் சுவாமிமலை** - முனைவர் த. அமிர்தலிங்கம்

**இறைவனிடம் கையேந்துங்கள் – அவன் இல்லை என்று சொல்லுவதில்லை (நீதிக்கதை)** - கலைமாமணி மா. இலட்சுமணன்

**இலக்கியங்களில் விநாயகர்** - டாக்டர் டி. செல்வராஜ்

**ஸ்ரீநரசிம்மர் மகிமை** - மும்பை ராமகிருஷ்ணன்

**ஸ்ரீமந் நாதமுனிகள்** - திருமதி இந்திரா ஆராஅமுதன்

**இறைவனை அடைதல் சுலபம்** - மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

**திருக்கோயில்**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

தொலைபேசி : 28334811, 28334812, 28334813

# அருணகிரிநாதர்

- **திருமிகு பு.ஏ. இராமையா,** இ.ஆ.ப.

அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை

உலகில் மனித சமுதாயம் தோன்றிய நாள் முதல் இன்று வரை மக்கள் நல்ல முறையில் வாழவும் வளரவும் வாழ்வில் அமைதி பெறவும் ஆண்டவன் அருள் கிட்டவும் அவ்வப்போது ஆன்மீகத் தலைவர்களும், அருளாளர்களும், சமயக் குரவர்களும் தோன்றி நெறிமுறைப்படுத்தி வந்துள்ளனர். அவ்வகையில் வியாசமுனிவர், வால்மீகி, துளசிதாசர், கபீர்தாஸ், இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்றவர்களும், இராமலிங்க அடிகள், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்ற இறையருட் செல்வர்களும் பல்வேறு வகையில் மக்களுக்கு நல்லொழுக்க நெறி முறைகளை போதித்து வந்துள்ளனர். அவர்கள் பாடிய பாடல்கள், இயற்றிய இலக்கியங்கள் எல்லாம் காலத்தால்என்றும் நிலைத்து நிற்கக் கூடியவை.

இறைத் தொண்டு செய்வதில் சைவ சமயக் குரவர்கள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்ற சைவநெறி அருளாளர்கள் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் என இறை நூல்களை இயற்றித் இன்தமிழுக்கு இனிமையும், பெருமையும் சேர்த்ததோடு மட்டுமல்லாமல் மக்களுக்கு மகேசத் தொண்டின் மகிமையை மாண்புற எடுத்துரைத்துள்ளனர். அந்த வகையில் முருகப் பெருமானால் 'நாதா' என்று அழைக்கப்பட்ட அருணகிரிநாதர் சைவ சமயத்திற்கும், மக்களுக்கும் ஆற்றிய தொண்டு எவராலும் எடைபோட முடியாது.

முருகப் பெருமானால் உபதேசம் செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மூவர். அவர்கள் தாம் அகத்தியர், சிவபெருமான், அருணகிரிநாதர் ஆவர். காரணம், முனிவர்களில் சிறந்தவர் அகத்தியர், தேவர்களில் சிறந்தவர் சிவபெருமான், மனிதர்களில் சிறந்தவர் அருணகிரிநாதர்.

மனிதர்களிலேயே சிறந்தவர் என்று அருணகிரிப் பெருமானை, அரிய தமிழ் தானளித்த முருகப்பெருமான் தேர்ந்தெடுத்து உபதேசித்தார் என்றால், அருணகிரிநாதர் எத்தகைய பெரிய அருளாளர் என்பது நமக்கு நன்கு விளங்குகின்றது அல்லவா! அவருக்கு மட்டுமல்ல, அவர் பாடிய திருப்புகழுக்கும் முருகன் திருவடி பதித்த பெருமை உண்டு. இத்திருப்புகழ் எத்துணை சிறந்தது என்பதற்கு அடையாளம்தான் முருகன் திருவடி முத்திரை. இதை அருணகிரிநாதரே கூறுகிறார்.

தாவடி யோட்டும் மயிலிலும் தேவர் தலையிலுமென்
பாவடி ஏட்டிலும் பட்டதன்றோ படிமாவலி பால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடு முட்ட
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே

- கந்தரலங்காரம்

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் என்னும் தமிழ்ச் சந்த மணம் வீசும் பாவேட்டில் தமது திருவடியாகிய முத்திரையைக் குத்துவதற்கு முன்னெச்சரிக்கையாக முதலில் மயிலின் தலை மேலும் தேவர்கள் தலை மேலும் தமது கால் வைத்து விட்டு சரிபார்த்து அதன் பின் அருணகிரிநாதர் பாவடி ஏட்டில் பாதத்தைப் முருகன் பதித்தான் என்று கூறுவர். இதிலிருந்து அத் திருப்புகழின் பெருமையை நாம் தெரிந்து கொள்ளலாம். அதை உறுதிபடுத்தும் வகையில்

''வேதம் வேண்டாம் சகல வித்தை வேண்டாம் கீத
நாதம் வேண் டாம்ஞான நூல் வேண்டாம் - ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்தாள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்''

என்று ஒரு அருளாளர் பாடியுள்ளார்.

திருக்குறளை இயற்றிய வான்புகழ் வள்ளுவரின் வரலாறு பலவாறாக கூறப்படுவதுபோல் இவரைப் பற்றிய வரலாறும் பலவாறாக கூறப்படுவதுண்டு. பட்டினத்தடிகள் திருஅருணைக்கு எழுந்தருளிய காலத்தில் கோயில் தாசியைக் கண்டு அவர் மோகித்ததாகவும், அதைப் பற்றி அந்த தாசி தன் தாயிடம் கூற, தாய் பெண்ணை அழைத்து வருமுன் சுவாமிகள் வீரியத்தை அரசிலையில் வைத்து, அந்த தாசியிடம் ''உன்னை நினைத்தவன் தொன்னையில் இருக்கிறான்'' என்று கூற, தொன்னையில் இருந்த அவ்வீரியத்தை அந்த தாசி அருந்த அதனால் கருவுற்ற அருணகிரிநாதரை பெற்றதாகவும் கூறுவர். ஆனால் பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தடிகளுக்கு பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான அருணகிரியார் மகனாவது பொருந்தாது என்றும், இவர் குலம்



பற்றி பலவாறு கூறுகின்றனர். இவர் காம இன்பத்தில் மூழ்கியதால் இவருக்கு தொழு நோய் தொற்றிக் கொண்டது என்றும், அந்த நிலையிலும் காம சுகம் வேண்டி துடித்தார் என்றும், அது கண்டு அவர் தமக்கையார் தம்மையே அளிக்க முன் வந்தார் என்றும் அது அவருக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது என்றும் அதன் காரணமாக தம் வாழ்நாளை முடித்துக் கொள்ள திருவண்ணாமலை கோபுரத்தில் ஏறிக் கீழே விழுந்தார் என்றும் அப்பொழுது முருகன் அவரைத் தாங்கிப் பிடித்தார் என்றும் அதன் பிறகு முருகன் அருளால் அவர் திருப்புகழ் பாடத் தொடங்கினார் என்றும் கூறுவர்.

இவர் திருவண்ணாமலையில் நல்லொழுக்கம் பண்பும் நிறைந்த குடியில் தோன்றி மனைவி மக்களோடு இல்லறம் நடத்தியவர் என்றும் அக்காலத்தில் சமுதாயத் தவறாக கருதப்படாத விலைமாதர் தொடர்பு இவருக்கு இருந்தது என்றும் அதன் காரணமாக செல்வத்தை இழந்து வறுமை நிலை அடைந்து தீராத நோயும் இவரைத் தீண்டியது என்றும் அதன் காரணமாக தன் தவறுகளை உணர்ந்து மனம் வருந்தி தற்கொலைக்கு இவர் முயன்ற பொழுது முருகன் திருவருள் இவரை தடுத்தாட்கொண்டது என்றும் கூறுவர். ''மனையவள் நகைக்க ஊரில் அனைவரும் நகைக்க'' என்று தொடங்கும் திருப்புகழ்ப் பகுதி மேற் கூறிய இவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உறுதிப் படுத்துவதாக அமைந்துள்ளது.

சம்பந்தாண்டான் என்ற தேவி பக்தன் ஒருவன் அருணகிரியாரிடம் பொறாமை கொண்டான், அண்ணாமலைப் பகுதியை ஆண்டு வந்த பிரபுடதேவ மன்னனிடம் சென்று, தான் வழிபடும் தேவியைச் சபையில் அனைவருக்கும் தரிசிக்கக் காட்டுவதாயும், அதுபோல் அருணகிரியாரையும் அவர் வழிபடும் தெய்மான முருகனைக் காட்டச் செய்ய சொல்லுமாறும் தூண்டினான். அவ்வாறே அரசனும் அருணகிரியாரிடம் வேண்டினார். அரசனின் வேண்டுகோளை ஏற்றார். ஆனால் சம்பந்தாண்டான் கூறியபடி தேவி சபையில் காட்சி தரவில்லை. அதே நேரத்தில் அருணகிரியார் குமரவேளை வேண்டி

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபினகாளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறுவாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோன்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடுதி அலைமோதும்
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜன்
உளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

என்று பாடினார். உடனே குமரவேல் மயிலின் மேல் அமர்ந்த வண்ணம் பேரொளியுடன் சபையினருக்கு அருட்காட்சி கொடுத்தார். அப்பேரொளியால் அரசருக்கு கண்ணொளி மழுங்கியது. சம்பந்தாண்டான் தூண்டியபடி அரசர் கண்ணொளிப் பெற உதவிட அருணகிரிநாதரிடம் வேண்ட அருணகிரியார் கிளி உருவம் கொண்டு பொன்னுலகம் புகுந்து கற்பக மலர் கொண்டுவந்து அரசன் கண்ணொளிப் பெற நல்கினார். அவரின் உடல் சம்பந்தாண்டாரின் சூழ்ச்சியால் எரிக்கப்படவே கிளி உருவிலேயே ஆறுமுகனின் திருத் தோளில் அமர்ந்தார் என்றும், கிளி உருவிலேயே கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம் முதலிய நூல்களைப் பாடினார் என்றும் கூறுவர்.

இவரின் வாழ்க்கை வரலாறு எவ்வாறாக இருந்தாலும் அவர் அருளிச் செய்த பாக்கள் காலத்தால் என்றும் நிலைத்து நிற்பவையாதலால் அருணகிரியாரின் புகழும் காலம் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

இவர் இளமையில் சங்கமருவிய இலக்கிய இலக்கணங்களிலும், சைவத் திருமுறைச் சாத்திரங்களிலும், இதிகாச புராணங்களிலும், வடமொழி நூல்களிலும் மிக்க தேர்ச்சி பெற்று விளங்கினார்.

இவர் முருகன் அருள் பெற்று முருகன் அருளாலே திருப்புகழ் பாடியவராவார். முருகன் எழுந்தருளியுள்ள பல திருத்தலங்களையும் குறிப்பாக அறுபடை வீடுகளையும் சென்று கண்டு மகிழ்ந்து பாடியவர். இவர் பாடிய பாடல்கள் நூலாகத் தொகுக்கப்பட்டு அத்தொகுப்பு ''திருப்புகழ்'' என வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்ச் சமுதாயம் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது - கொடுத்து வருகின்றது. பக்தி இலக்கியங்கள் தமிழிசையை மிகவும் ஓர் உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றது எனலாம். தேவாரம், திருவாசகம் பாடிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்கள் அளவிடற்ரிய பக்திமணம் கமழும் பாடல்களை இயற்றியதோடு மட்டுமல்லாமல் அவற்றை இசையோடு பாடும் தன்மையையும் ஏற்படுத்தியவர்கள். சாதாரணமாக அடித்தள மக்களுக்கும் அந்த இசைப் பாடல்களை தெரியச் செய்த மிகப் பெரிய பெருமைக்குச் சொந்தக்காரர்கள் அவர்கள். மேலும், குறிப்பாக சந்த ஓசை நயத்தை வைத்து சித்துக்களைக் காட்டி சாதனைப் புரிந்தவர் அருணகிரிநாதர். சந்த ஓசையுடன் கூடிய பாடல்களை அவரைப் போல் வேறு யாரும் இயற்றியதில்லை என்று கூறலாம். அதனால்தான் அருணகிரிநாதரை ''ஓசை முனி'' என்று பாடிப் பரவினார் பாம்பன் சுவாமிகள். திருப்புகழ் சந்தங்கள் யாரையும் ஈர்த்து அடிபணிய வைக்கும். சந்தங்களின் சொந்தக்காரர் அருணகிரிநாதர். ''திருப்புகழ் சந்தங்களாலே பல புதிய லயங்களைக் கற்று கொண்டேன் அது ஒரு லய சமுத்திரம். சில நேரங்களில் என்னால் அந்த லயங்களுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை'' என்று மறைந்த மிகப் பெரிய லய மேதை பாலக்காட்டு மணி அய்யர் ஒருமுறை கூறினாராம்.

அருணகிரிநாதரின் பாடல்கள் அனைத்துமே சந்தப் பாடல்கள்தாம். பொருள் புரியாவிட்டாலும் கூட சந்தத்தைக் கொண்டே பலரையும் சொந்தமாக்கிக் கொண்டு விடும் ஆற்றல் அருணகிரிநாதரின் திருப்புகழுக்கு உண்டு.

முத்தைத்தரு பத்தித் திரு நகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேண
பத்துத்தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக் கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள் வதும் ஒருநாளே
தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்

தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே!

என்ற பாடலைத் தெரியாதவர் யாரும் இருக்க முடியாது. பலருக்குப் பொருள் புரியாவிட்டாலும் இப்பாடல் பலரின் உள்ளங்களில் பதிந்திருப்பதற்கு காரணம் இதிலுள்ள சந்தம் தான்.

ஒருமுறை வில்லிப்புத்தூர் ஆழ்வாருக்கும், அருணகிரியாருக்கும் புலமைப் போட்டி ஒன்று நடந்ததாகக் கூறப்படுகிறது. தமிழ்ப் பாடல் இயற்றுவதில் தவறு செய்யும் புலவர்களை வில்லிபுத்தூரார் காதறுத்துத் தண்டிப்பது வழக்கம். அவரின் செருக்கை அடக்க வேண்டுமென்று பலர் அருணகிரியாரிடம் வேண்டிக் கொண்டனர். அவரும் அப்போட்டிக்கு ஒப்புக் கொண்டார். அப்போட்டியில் அருணகிரியார் முருகன் மேல் அந்தாதியாகப் பாடத் தொடங்க ஒவ்வொரு பாடலுக்கும் வில்லிபுத்தூரார் பொருள் சொல்லி வந்தார். ஆனால் அருணகிரியார் பாடிவந்த 54வது பாடலான ''திதத்தத் தித்தத் திதி தாதை தாததுத் தித்தத்திதா'' என்னும் பாடலுக்கு உரை கூறத் தெரியாமல் திகைத்தார். அருணகிரியார் தாமே அப்பாடலுக்குப் பொருள் சொல்லி மேலும் பல பாடல்கள் பாடி போட்டியில் வென்றார். அப்போது பாடிய போட்டிப் பாடல்களே கந்தர் அந்தாதி என்று வழங்கப்படுகின்றது.

இக்குறிப்புகள் தண்டபாணி சுவாமிகள் பாடிய புலவர் புராணம், கந்தப்ப தேசிகரின் திருத்தணிகை உலா முதலியவற்றில் குறிக்கப்பட்டுள்ளன. ''வாக்கிற்கு அருணகிரி'' என்ற தனிப்பாடல் வரி இவர் கவி வன்மையை சிறப்பித்துப் பாராட்டுகிறது.

''கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன
எந்தையருள் நாடி இருக்கும்நாள் எந்நாளோ?''

என்னும் தாயுமானவர் வாக்கும்,

''அருணகிரி நாதர் அனுபவம் நாயேற்குக்
கருணை பொழி போரூரா காட்டு''

என்னும் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் வேண்டுகோளும் அருணகிரியாரின் பக்தி முதிர்வை நமக்குத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

மும்மூர்த்திகளும் காணாது அவருக்குமேலுமாகி எல்லாமுமாகி நின்ற தத்துவமே முருகன் என்று அவர் கூறுகின்றார். எல்லாத் தெய்வங்களும் முருகன் என்பதே அவர் துணிபு.

அருணகிரியார் திருமால் மருகனென முருகனைப் பலவிடங்களிலும் பாடியிருத்தலின் சைவ வைணவ சமரச நோக்கமுடையவராவர். அதுபோல பல புராண இதிகாசங்களையும் அவைகளில் கூறப்படும் கடவுளையும் தத்துவங்களையும் சமரசமாய்க் கையாண்டு பாடியிருக்கின்றார். கந்தபுராணத்தில் காணப்படும் கந்தப் பெருமானுடைய திருவிளையாடல்களை அனுபவித்த முறையில் வைத்துத் திருப்புகழில் மிகுதியாகப் பாடியிருக்கின்றார். சிவயோகத்தையும் அதை நாடும் ஜீவனுடைய தத்துவத்தையும் நன்றாக விளக்கியிருக்கிறார். 'ஐந்து பூதமும் ஆறு சமயமும்' என்னும் திருப்புகழில் ஆன்மாவானது ஆணவம் முதலான மும்மலத்தையொழித்துத் தெய்வத்தை அடைய வேண்டிய நெறியைக் குறிப்பிட்டிருக்கிறார். ஆசைகளும் ஆணவமும் அடங்கப் பெற்றாலன்றி முருகனை அணுக முடியாதென்கிறார். ஆசையை அகற்றினாலன்றி வினை தீராது; மூண்ட வினையே விதியாகும்; விதியைத் தாண்டுவதே கதி; அந் நற்கதியைப் பெற வேண்டுமானால் முருகன் நாமமும் முருகன்பால் பக்தியும் இன்றியமையாத நெறி என்று கூறுகிறார்.

அவர் வேதம், உபநிஷதம், ஆகமம், புராணம் முதலியவைகளில் குறிப்பிட்டுள்ள அரிய நுட்பங்களைத் தெரிந்து இசைத்தமிழ்ப் பாடல்களாகப் பாடி, யாவரும் அறிந்து ஒழுகக் கூறியவாறு எளிதான அறநெறியைக் காட்டியிருக்கிறார். இவருடைய இத்தகைய உயர்வை எண்ணியே தாயுமானவர்,

'ஐயா அருணகிரியப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?'

என்று அருணகிரியாரைப் பற்றி உணர்ச்சி ததும்பப் போற்றுகிறார்.

எனவே அருணகிரியாரின் அருந்தமிழ்ப் பாடல்களை மனமுருகிப் பாடி ஆண்டவனின் அடி தொழுவோம்.

* * *

# திருமந்திர உபதேசம்

''திருமந்திரச்செம்மல்'' **திருமிகு T.V. வெங்கட்ராமன்,** இ.ஆ.ப. (ஓய்வு)

திருமூலர்

திருமூலநாயனாரைப் பற்றிய செய்திகள் சில வற்றைச் சேக்கிழார் பெருமான் அருளிச்செய்துள்ள திருத்தொண்டர் புராணத்திலிருந்து தெரிந்து கொள்ள லாம். அத்துடன் திருமூலர் பெருமானே திருமந்திர மாலையில் தம்மைப்பற்றிச் சில குறிப்புகளை அகச் சான்றாக அருளிச் செய்கின்றார்.

அவர் பெற்ற அனுபவங்கள் அங்கும் இங்கு மாக நூல்முழுவதுமாகக் காணப்படு கின்றன.

மேலும் 'சதுரகிரிப்புராணம்' போன்ற தல புராணங்களிலும் திருமூலரைப் பற்றிய குறிப்பு களைப் பார்க்கலாம்.

இந்தப் புராணக் குறிப்புகள் திருமூலரைப் பற்றிப் பலவகைகளிலே பேசுகின்றன. அவற்றைப் பற்றிய கருத்துக்களை அளிப்பது சிறப்பான பலனைத் தராது.

கயிலைமலையில் சிவபெருமான் அருள் பெற்றவராக நான்மறையோகிகள் ஒருவர் இருந் தார். அப்பொழுது தென்னாட்டில் வாழ்ந்து வந்த அகத்தியர் பெருமானுக்கு உற்ற நண்பராக இருந்தார்.

அவரோடு சிலநாள் தங்கும் விருப்பத்துடன் தென்னாட்டை நோக்கிப் பயணம் மேற்கொண்டார்.

இவ்வாறு சேக்கிழார் பெருமான் திருத் தொண்டர் புராணத்தில் திருமூல நாயனார் வரலாற் றைத் தொடங்குகின்றார்.

திருமூலருடைய வாழ்க்கையின் பிற்பகுதியே இதைத் தொடர்ந்து பேசப்படுகின்றது.

அவர் கயிலையிலே வாழ்ந்த காலத்தைப் பற்றிய செய்திகளை அகச்சான்றாகத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

அவர்கள் கயிலை மலையில் வாழுங்காலத் தில் நந்திதேவரிடம் வேதாகமங்களைக் கற்றுக் கொள்கின்றார். அப்பொழுது அவருடன் சீடராக இருந்தவர்கள் நான்கு நந்திகள் என்று சொல்லப்படும் சனகர், சனந்தனர். சனாதனர், சனற்குமாரர் மேலும் சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகியோர் ஆவார்கள்.

அக்காலத்தில் அவர் ''நாதன்'' என்ற பெயரை யும் பெற்று இருக்கின்றார்.

நந்தி தேவர் அவர்களுக்கு மந்திரம் கற்கும் வழி முறைகளைச் சிறப்பாக உபதேசித்திருக்கின்றார்.

திருமூலருடைய திருவுள்ளம் அத்துடன் அமைதி பெற்றுவிடவில்லை. கல்வி கேள்விகளில் தம்மை உயர்த்திக் கொண்டாலும் எல்லாவற்றுக்கும் மூலமான ஆதாரமான அந்தப் பரம் பொருளை நாடு கின்றார்.

நாடி, அடைய வேண்டும் என்ற நிலையில் தீவிரமான தவத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள் கின்றார். இறைவனுடைய ஐந்தொழில் இயக்கத் தைப் பற்றிய ஆழ்ந்த உணர்வுகள் அவருடைய உள்ளத் தில் விளக்கம் பெறுகின்றன.

தம்மையும் தம்முடைய தலைவரையும் அறிந்து கொள்ளும் பேற்றினைப் பெறுகின்றார்.

அதைப்பற்றிய ஞானமும் அவரை வந்து அடை கின்றது. இதைத் திருமூலர் பெருமானே எடுத்துச் சொல்லுகின்றார்.

''நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் மெய்ஞ் ஞானத்துள்
நண்ணினேன்
நந்தி அருளாலே நான் இருந்தேனே.''

சேக்கிழார் பெருமான் இவரைப் பற்றிச் சொல்லும் பொழுது நான்மறை யோகிகளில் ஒருவர் என்கிறார்.



வேத ஆகமங்களை நன்கு கற்று அவற்றின் பொருளை ஆராய்ந்து தெரிந்து கொண்டு ''வேத ஆகம விழுப்பொருள்'' சிவபெருமானே என்று நன்கு உணர்ந்து தம்முடைய கண்ணோட்டத்தை அகமுக மாக்கித் தீவிரமான யோகத்தை மேற்கொண்டு யோகத் தின் முடிவு நிலையான சமாதியில் சிவப்பரம்பொரு ளோடு ஒன்றிப் போயிருப்பதே ''நான் மறையோகம்'' என்று எடுத்துக் கொள்ள லாம்.

இதை ''நந்தியோகம்'' என்றும் ''நவ யோகம்'' என்றும் திருமூலர் பெருமான் பின்னர் எடுத்து உரைப்பார்.

இத்தகை நான்மறை யோகமே வேதாந்தத்தின் முடிவு என்று திருமூலர் பெருமான் தெளிவு ஆக்கு கின்றார்.

வேதத்தின் சிறப்பைப் பற்றிச் சொல்லும் பொழுது திருமூலர் பெருமான் இத்தகைய யோகத்தை விளக்குகின்றார்.

''திருநெறி யாவது சித்து அசித்து அன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே''

யோகநெறியில் தம்மை முழுதும் ஈடுபடுத் திய நிலையில் இவர் அட்டமாச்சித்திகளையும் பெறு கின்றார்.

இந்த நான்மறையோகி தென்னாட்டிற்கு வரும் வழியில் திருக்கேதாரம், நேபாளம், காசிநகரம், திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருஆலவனம், திருவேகம்பம், திருவதிகை போன்ற புனிதத் தலங் களுக்குள் சென்று வழிபட்டதாகச் சேக்கிழார் பெரு மான் தெரிவிக்கின்றார்.

யோகியார் பெரும்பற்றப் புலியூருக்கு வரு கின்றார். உலகமெலாம் உய்ய ஐந்தொழில் இயக் கத்தை எப்போதும் செய்து கொண்டு இருக்கும் கூத்தப்பிரானுடைய சேவடிகளை வணங்கி மெய் யுணர்விலே சிறப்பான அனுபவம் பெற்று அதனால் வரும் ஆனந்தத்திலே திளைத்தவராக மேலும் அந் நகரைவிட்டு நீங்க விரும்பாதவராகப் பலகாலம் வாழ்கின்றார்.

தில்லைத் திருநகர் அனுபவம் யோகியாடைய கல்விக்கு ஒரு புதிய திருப்பத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

கயிலை மலையிலே நந்திதேவரின் சீடராக ஞானம் பெறுவதற்கு உரிய தகுதிகளை எல்லாம் பெற்று யோகியார் தில்லையிலே அந்த ஞானத்தை

உள்ளார்ந்த அனுபவ நிகழ்ச்சியாகப் பெறுகின்றார் என்று கருதுவதில் தவறு இல்லை.

இத்தகைய அனுபவத்தைத் திருஞான சம்பந்தரும் தில்லையிலே பெற்று இருக்கிறார் என்பதைச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்திலே அழகாக எடுத்துச் சொல்லுகின்றார்.

சீர்காழியில் அம்மையின் திருக்கரங்களால் பெற்ற ஞானப்பாலை உண்டு உணர்வரிய மெய்ஞ் ஞானத்தைப் பெற்ற திருஞானசம்பந்தர் தில்லையிலே கூத்தப்பிரானை நேர்முகமாகக் காணும் பொழுது ''உணர்வு நேர்வரும்'' அனுபவத்தைப் பெறுகின்றார்.

யோகியார் மேலும் தம் பயணத்தைத் தொடர்ந்து காவிரியாற்றைக் கடந்து திரு ஆவடு துறைக்கு வருகின்றார்.

அங்கிருக்கும் பசுபதியார் கோயிலை வலம் வந்து இறைவன் மீதுள்ள காதலினால் அங்கே பல காலம் தங்குவதற்கு விருப்பம் கொள்கின்றார். அவர் மனதில் எழுந்த இக்கருத்து ஒரு திருவருள் நிகழ்ச்சியாகவே இருந்திருக்க வேண்டும்.

ஏனெனில் இவ்விடத்தில் தான் அவர் பல ஆண்டுகள் நிட்டையில் அமர்ந்து உலகிற்குத் தமிழாகமம் ஓதப் போகின்றார்.

இந்த இடத்திற்குப் பெயரே ''ஆவடுதண் துறை'' ஆகும். இறைவி ஒரு காலத்தில் பசுவின் கன்றாக வந்து இறைவரை வழிபட்ட இடம் ஆகும்.

''ஆ'' என்றால் பசுத்துவம்.

''ஆவடு துறை'' என்பது பசுத்துவத்தை நீக்கிக் கரையேற்றும் இடம் என்று பொருள் கொள்ளலாம்.

தாம் அருளப் போகும் திருமந்திரமாலையால் சீவராசிகளின் மலங்களை எல்லாம் நீக்க இருக்கும் திருமூலர் பெருமான் இத்திருத்தலத்திலே 3000 ஆண்டுக் காலம் நிட்டையில் அமர்ந்தார் என்பதில் வியப்பு ஒன்றும் இல்லை.

அகச்சான்றாக திருமூலர் பெருமான் தாம் திரு ஆவடுதுறை சேர்ந்ததை எடுத்துச் சொல்லுவார்.

''சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே!''

இந்த இடத்திலே தான் இறந்து கிடந்த மூலன் என்ற பெயருடைய இடையனுடைய உடலில் புகுந்து இந்த யோகியார் அவனுடைய உடலைச் சுற்றி அழுது கொண்டிருந்த பசுக்களின் துயரத்தையும் போக்குகின்றார்.

இவ்வாறு உயிரானது ஒரு உடலைவிட்டு மற்றொரு உடலில் பாய்வது என்பது பரகாயப் பிரவேசம் என்கின்ற அட்டமாச்சித்திகளில் ஒரு சித்தி ஆகும்.

மூலன் உடலில் புகுந்த யோகியார் திருமூலர் ஆகிறார்.

யோகியாருடைய உயிர் இதுகாறும் வாழ்ந் திருந்த உடல் பலவகைகளிலே பண்பட்டதாக இருந்திருக்க வேண்டும். பல தலங்களையும், யோகங்களையும் மேற்கொண்டு உறுதி பெற்ற உடலாக இருத்தல் வேண்டும்.

அதனால் இறைவருடைய திருவருளும் அந்த உடலை யோகியாருடைய உயிரிடமிருந்து நீக்கி வைத்தது. அந்த உடலும் பின் காணப்படவில்லை. அதுவும் இறைவனுடைய திருவுள்ளம் போலும்.

யோகியார் நுழைந்த உடல் ஒரு இடையனுடையது. கல்வி கேள்விகளில் ஆற்றல் பெற்றிராதது. ஆயினும் அந்த உடலும் யோகியாருடைய உயிரைத் தன்னுள் அமர்த்திக் கொள்ளத் தகுதி பெற்றதாக இருக்கின்றது.

இது பற்றிச் சற்றுச் சிந்தித்தல் நல்லது.

உடலும், உடலைச் சார்ந்த கருவிகளும் சடப் பொருள்கள், தானாக இயங்கா. ஆயினும் அவற்றினுள்ளே உயிரானது சிவகாலம் வாழ்கின்றது. அவ்வாறு உயிர் வாழ்ந்தாலும் உயிர்தான் அந்த உடலையும் கருவிகளையும் இயக்குகின்றது என்று சொல்ல முடியாது.

ஏனென்றால் உயிருக்கே பல கட்டுப்பாடுகள் உண்டு. உயிரும் தானாக இயங்காது. உயிரை இயக்க ஒருவன் வேண்டும். உயிருடைய அறிவும் ஆற்றலும் குறைபாடு உடையவை. தான் சேர்ந்த பொருள்களின் தன்மையை ஒட்டியே உயிரின் தன்மையும் அமையும்.

உயிர் சித்துப் பொருளாக இருந்தாலும், அதனுடைய அறிவினை இயக்க வேறொரு அறிவு வேண்டும்.

இத்தகு நிலையிலே ஒரு உடலோ அல்லது மற்றொரு உடலோ சிறப்புடையது என்று சொல்லிக் கொள்ள இடமே இல்லை.

அந்த உடலில் புகுந்து சிலகாலம் வாழும் உயிரின் தன்மையும், பக்குவமுமே உடலின் தன்மை யையும், பக்குவத்தையும் நிர்ணயிக்கின்றது.

யோகியார் விட்ட உடல் சிறப்பானது என்றும் அவர் புகுந்த மூலனுடைய உடல் தகுதியற்றது என்றும் சொல்லுவது இறையருளின் தன்மையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாத ஒன்றாகும்.

யோகியார் மூலனுடைய உடலில் புகுந்த போது அவருடைய ஞானத்தையும் முதிர்வையும் கற்ற அறிவையும் தன்னோடு கொண்டு வருகின்றார். அவை எல்லாம் இயங்குவதற்கு மூலனுடைய உடல் நிலைக்களன் ஆகின்றது.

மூலனுக்கென்று வாழ்க்கை அனுபவம் உண்டு. அவ்வாழ்க்கை அனுபவத்தில் பண்பட்டது மூலனுடைய உடல்.

அந்த உடலோடு யோகியாருடைய ஆற்றலைத் திருவருள் சேர்த்து வைக்கின்றது.

அதனுடைய அடிப்படையை ஆராயப் புகுவது முடிவில்லாததாக அமையும்.

உலகம் உய்ய திருவருள் உயிர்களையும் தனுகரண புவன யோகங்களையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றது. அதைப் பார்த்து, வியந்து, திருவருளின் தன்மையை உணர்ந்து கொள்வதே விவேகம் ஆகும்.

''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும்
ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளர்க்கவேண்டா''

என்று திருஞானசம்பந்தர் பெருமான் அருமையாக எடுத்து உரைக்கின்றார்.

திருமூலர்பெருமான் பசுபதியார் கோயிலில் வெளிப்புறத்தில் ஒரு அரசமரத்தின் கீழ் தவத்தில் அமர்ந்து ஆண்டுதோறும் ஒரு திருமந்திரம் என 3000 மந்திரங்களை அருளிச் செய்கின்றார்.

இதை

''நந்தி இணையடி நான்தலைமேற் கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து



அந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தை செய்து ஆகமம் செப்பலுற்றேனே''

என்ற பாடல் அகச் சான்றாக விளக்குகின்றது.

இவ்வாறு பல ஆண்டுகள் நிட்டையிலே இருந்தமையை.

''இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே''

என்ற பாடலும் நமக்கு அகச் சான்றாக விளக்குகின்றது.

இங்கே ''எண்ணிலி கோடி'' என்பதை அளவற்ற காலம் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

யோகிகளும், ஞானிகளும் நிட்டை கூடிய நிலையில் இருக்கும் பொழுது காலம் இடம் இவற்றைப் பற்றிய எண்ணங்களை எல்லாம் கடந்தவர்களாக இருப்பார்கள் என்பதை அருளாளர்கள் நமக்குத் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

திருமூலர் பெருமான் அருளிச் செய்தது திருமந்திர மாலை. இந்த நூலைப் பற்றிய சில சிறப்புக் கருத்துக்களை வரும் இதழில் ஆய்வு செய்து மகிழ்வோம்.

***

# ஆன்மீகம்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப (ஓய்வு)

★ கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்பது போல், உலகியல் இன்பத்திலும் ஆசை வீடு பேறுபெறுவதற்கும் ஆசை என்று இரண்டும் கெட்டான் நிலையிலிருப்பவர்கள் பரிதாபத் துக்கு உரியவர்கள் என்றாலும் விரைவில் உல கியல் ஆசையைக் குறைத்து முன்னேற்றப் பாதை யில் செல்வார்கள்.

★ காமுகனுக்குக்கூட பெண்மீதுள்ள மோகம் போகப் போகக் குறைந்துவிடும். ஆனால் பக்தனுக்கு இறைவன் மீதுள்ள மோகம் முடிவென்றில்லா மல் போகப்போக மேலும்மேலும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும்.

★ இருட்டறையில் நச்சுப் பாம்புடன் ஒருவன் அடைக்கப்பட்டால் எப்படி தன்னுடைய யுக்தி, பலம் ஆகியவைகளைப் பிரயோகப்படுத்தி வெளி யில் வர முயற்சி செய்வானோ அதுபோன்று பக்தி, பயம் ஆகியவைகளின் மூலமாக இந்த உலக வாழ்க்கையிலிருந்து விடுதலைபெற முயற்சி செய்ய வேண்டும்.

★ இறைத்துவத்தை அறிந்து கொண்டு குழம்பிப் போவதைவிட இறைவனுடைய மகத்துவத்தை எண்ணிக்கொண்டே இருந்தால் ஒரு ஆத்மசாத கன் ஆன்ம வளர்ச்சியில் வெற்றி நடை போடு வான்.

★ இறைவனுடைய திருவடி அதைவிட திருவடி மூலம் அவருடைய திருமேனியைத் தாங்கி நிற்பதால் திருவடி முக்கியமும் மகத்துவமும் பெற்றுள்ளது. அதனால்தான் அவன் தாள் வணங்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

★ ஆன்மீகக் கல்வியை உரியமுறையில் பயன் படுத்திக்கொள்ளும் இளைஞர்கள் தங்களுக்கு ஏற்படும் அறிவுக் கூர்மையால் பொருளையும் அருளையும் சம்பாதிப்பார்கள் என்பது திண்ணம்.

★ உயிர், தான் உள்ளுடலும் அல்ல, பரு உடலும் அல்ல என்று தெரிந்து கொள்வது மேலோட்ட மாகப் பார்த்தால் அது தன்னை அறிதலாகும். இந்தத் தெளிவு மட்டும் இறைவனை அறிவதற் குப் போதுமானது இல்லையென்றே தோன்று கிறது.

★ முக்குறும்பை (செல்வச் செருக்கு, கல்விச் செருக்கு, குலச்செருக்கு) ஆகியவைகளை நீக்கி முக்குற்றத்திலிருந்து (காமம், வெகுளி, மயக்கம்) விடுபட மேற்கொள்ளும் முயற்சியே ஆத்ம சாதக மாகும்.

★ சாமு சித்தர்களைப் போன்று மற்றவர்களுக்கு முற்பிறவிகளின் ஞாபகம் இல்லையாதலால், தான் நடப்புப் பிறவியில் அனுபவித்து வரும் இன்ப துன்பங்களை வைத்து முற்பிறவிகளில் செய்த வினைகளைப் பற்றி ஓரளவு யூகிக்க முடியும்.

★ நாக்கிற்கு சுவையை உணர்கின்ற தன்மை இருப் பதுபோல் சிற்றுயிருக்குப் பேருயிரை (கடவுள்) உணர்வதற்கு இருக்கும் தன்மைதான் பகுத்தறிவு எனச் சொல்லப்படுகிறது.

★ ஆன்ம வளர்ச்சி அடைந்து வருபவனுக்கு அக வழிபாட்டின்போது அல்லது புறவழிபாட்டின் போது சிந்தை ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது ஏதும் தோன்றாமல் மௌனமே நிலைத்து நிற்கும்.

★ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எப்படி உயிரினங்களுக்கு முதுமை ஏற்படுகின்றதோ அது போன்று பல்வேறு பிறவிகள் எடுத்தபிறகு ஒரு காலகட்டத்தில் எல்லோருக்கும் ஆன்ம வளர்ச்சியில் தானாக நாட்டம் ஏற்பட்டுவிடும்.

★ தர்மத்தின் பயனாக ஒருவன் வாழ்க்கையில் துன்ப மற்ற இன்பம், வேண்டிய வசதிகள் ஆகியவை களைப் பெற வாய்ப்புண்டு. ஆனால் என்றும் இளமை என்ற பேச்சுக்கே இறைவனுடைய சட்டத்தில் இடமில்லை.

★ உலகியல் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையி லும் ஒருவனே முதலிடத்தைப் பெற முடியும். ஆனால் இறைவனிடம் அனைவரும் தகுதியை யும் பக்குவத்தையும் பெற்றவுடன் முக்தி என்ற முதலிடத்தைப் பிடித்து விடலாம்.

★ உலக வாழ்க்கை, தேனில் தோய்த்த கசப்பு மருந்து என்று உணர்ந்து இந்த உடலும் உயிரும் ஒட்டி யிருப்பது இறைவனுக்கு என்கிற எண்ணம் ஏற் பட்டு விட்டால் இறைவனை நெருங்கும் நேரம் நெருங்கிவிட்டது என்று தெரிந்து கொள்ளலாம்.

★ குமரிப் பெண்ணின் உள்ளத்திலே குடியிருக்க நான் வரவேண்டும் என்ற பாடல் காதில் ஒலித்தால் ஆத்ம சாதகன் வாய் ''குமரக்கடவுளின் உள்ளத்திலே குடியிருக்க நான் வரவேண்டும்'' என்றுதான் ஒலிக்க வேண்டும்.

★ நிதி வசதி இருந்தால் அதிக அளவில் இறைவன் புகழைப் பரப்பலாம் என்பது உண்மை என்றாலும் முழுமையாக ஆன்ம வளர்ச்சியடைந்தவன் அப்படி நினைப்பதில்லை. இறைவனின் விருப்பத்தின்படி நடக்கட்டும் என்றிருப்பான்.

★ நாம் செய்த செயல்களின் அடிப்படையில் இறைவன் அளித்த தீர்ப்பின்படி நமக்கு வாழ்க்கை அமைந்திருக்கிறது என்ற உண்மையை நம்பி விட்டால் பிறரிடம் குற்றம் காணும் குணம் மறைந்து மன அமைதியும் ஆன்ம வளர்ச்சியும் ஏற்படும்.

★ மரண பயத்தினால் வயது முதிர்ந்தவர்கள் ஒரு கட்டத்தில் விரும்பியோ விரும்பாமலோ தனக்கு நல்லசாவு கிடைக்க வேண்டும் என்று இறைவனிடம் கேட்பதை இறை வழிபாட்டின் ஒரு பகுதியாகக் கருதலாம்.

★ இறைவன் துணையில்லாமல் ஒருவன் தன்னுடைய அறிவையும், ஆற்றலையும் மட்டுமே நம்பி ஒருகாரியத்தில் ஈடுபடுவது அம்மியைக் கட்டிக்கொண்டு ஆழமான ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும். தோல்வியடைந்தால் ''நான் ஒன்று நினைத்தேன் தெய்வம் ஒன்று நினைத்து விட்டது'' என்று சொல்வது அறியாமையாகும்.

★ எண் ராசி பார்த்து காரியம் மேற்கொள்கிறவர்கள் ஏமாற்றமடைய நேரிடும். இறைசிந்தனையுடன் எண்ணுகின்ற எண்ணம் மற்றும் செயல்கள்தான் வாழ்க்கையை மேம்படுத்தும்.

★ அருளாளர்களுக்கே கனவின் மூலமாக இறைவனின் அறிவுறுத்துதல் கிடைத்திருக்கிறது. மற்றவர்கள் அப்படிச் சொன்னால் நம்பமுடியாது.

★ ''கோளறு திருப்பதிகம்'' படிப்பது நல்லது. யாருக்கும் எந்தச் சூழ்நிலையில் நன்மை பயக்கும் என்று தெரியாத நிலையில் உடனே அதன் பயன் கிட்டும் என்று நினைத்து மற்ற முயற்சிகளை விட்டுவிடக்கூடாது.

★ பசித்தவன் புசிக்குமுன்னே தட்டிப் பறித்தல் பாவம். ஆனால் காலன் நம்மை எந்த நேரத்திலும் தட்டிப் பறிக்கலாம். அது பாவமில்லை. இறைவனின் சட்டம். அதனால் எப்பொழுதும் நாம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

★ ஆறறிவுள்ள மனிதனின் ஆன்மா தன்தலைவனாகிய இறைவனை நினைப்பதற்கு முற்றிலும் மறுக்காது. சிறிதளவு நினைத்தாலும் அதைப் பற்றிக் கொண்டு இறைவன் மேலும் மேலும் ஆர்வத்தை வளர்த்து விடுவார்.

★ நெருப்பில் கையை வைத்தால் சுடும் என்று அறிந்த மனிதன் நெருப்பில் கையை வைக்க மாட்டான். உலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்று அறிந்தும் மனிதன் வஞ்சகப் பிறவியை விரும்புகிறான். ஏனென்றால் நெருப்பு துன்பத்தை மட்டும் தருகிறது. உலக வாழ்க்கையில் துன்பத்தோடு இன்பமும் கலந்திருக்கிறது.

★ நெய்க்குடத்தைப் போட்டவனும் அழுகிறான். தண்ணீர்க் குடத்தைப் போட்டவனும் அழுகிறான் என்பது போல் இல்லாதவனும் சரி இருப்பவனும் சரி ஒன்றுபோல இறைவனிடம் ஐஸ்வர்யத்தை வேண்டுகின்றனர். ஈஸ்வரனை நினைத்துக் கொண்டே இருந்தால் அவனே ஐஸ்வர்யம் என்பதை உணர்வார்கள்.

★ சுவையுள்ள பதார்த்தமும் தின்னத் தின்னத் திகட்டும். தின்ற பிறகு நெஞ்சைப் பிறட்டும். ஆனால் இறைவனை எண்ண எண்ண இனிக்கும். இன்னும் இன்னும் நினைக்க நினைக்க நெஞ்சம் நிறையும்.

★ விடியவிடிய ராமாயணம் கேட்டு, சீதைக்கு ராமன் சித்தப்பா, என்று சொன்னால் சொன்னவனுடைய கவனக்குறைவையே காட்டுகிறது. அதே சமயத்தில் ராமாயணம் சொன்னவர் எல்லாரும் புரியும் வகையில் சொல்லவில்லை என்ற காரணமாகவும் இருக்கலாம். அதுபோல் ஆத்ம சாதகனிடம் ஆரம்பத்தில் ''நீ யார்'', ''நான் யார்'' என்ற புரியாத தத்துவத்தைத் தெரியுமா என்று கேட்டு குழப்பக் கூடாது.

★ கோவில்களின் மகிமை, பக்தியின் பெருமை மற்றும் கடவுள் புகழைப் பரப்புதல் ஆகியவைகளை ஊக்குவிக்கவும், மக்களின் துன்பத்தையும் ஆசையையும் பயன்படுத்தி ஆன்மீகம் என்ற பெயரில் ஏமாற்றுதல், பொய் நம்பிக்கையை வளர்த்தல் ஆகியவைகளைத் தடுக்கவும் ''புதுமை ஆஸ்திகர்கள்'' பலபேர் தோன்ற வேண்டும்.

★ இளைஞர்களுக்கு (இருபாலருக்கும்) ஆன்மீகத்தில் உள்ள ஈடுபாடு பிரமிக்க வைக்கிறது. அவர்களுடைய ஆர்வம் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தடைப்பட்டு நிற்கிறது. நல்லோர்கள் அவர்களுக்கு ஆறுதல் கூறி ஊக்குவிக்க வேண்டும்.

★ ★ ★

# திருத்தணிகை மகா கும்பாபிஷேகம் : சிறப்புச் செய்திகள்

- ஆர். முத்துசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

பொதுவாக ''மகா கும்பாபிஷேகத்தின்'' போது கருடபகவான் பறந்து வட்டமிடுவது அதன் புனிதத்திற்குச் சான்று என்பார்கள்! திருத்தணிகை திருக்கோயில் ''மகா கும்பாபிஷேக''த்தின் போது கருடன் பறந்து பிரதட்சணமாக வட்டமடித்து கிழக்கு நோக்கிச் சென்றதை பக்தர்கள் பக்திப் பரவசமுடன் பார்த்து முருகா! முருகா! என கோஷமிட்டனர்!

கரூர் அன்னதானக் கமிட்டியார் திருத்தணி மகா கும்பாபிஷேகத்தன்றும், அதற்கு முன்தினமும் மலைக்கோயிலில் அகமும் முகமும் மலர சுமார் 45,000 பக்தர்களுக்கு இனிப்பு பாயசத்துடன் அறுசுவை விருந்து படைத்தனர். அதுவும் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை இடைவிடாது முகமலர அன்ன தானம் செய்தனர். இதற்குமுன் பழனி, ஈரோடு, திண்டல், ஸ்ரீரங்கம், திருவாரூர், திருவண்ணாமலை, கரூர் அருள்மிகு செல்லாண்டியம்மன் ஆகிய திருக்கோயில்களின் ''மகா கும்பாபிஷேகத்தின்போது'' அறுசுவையுடன் கூடிய அன்னதானம் செய்தனர். திருவண்ணாமலை மகா கும்பாபிஷேகத்தில் யாக சாலை பூசை தொடங்கியது முதல் கும்பாபிஷேகம் முடியும் வரை சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் செய்தனர். இந்த அன்ன தான நிகழ்ச்சி அண்மைக்கால தமிழக வரலாற்றில் நடைபெற்றிராத அதிசயமாகும்!

திருத்தணிகை பழைய கொடிமரத்திற்குப் பதிலாக புதிய தேக்குமரத்தாலான கொடிமரம் நிறுவப்பட்டது. இதன்மேல் போர்த்தப்பட்டிருந்த செப்புக் கலசத்தின் மேல் 4300 கிராம் எடையுள்ள தங்கரேக் வேயப்பட்டது! இத்திருப்பணிகளைச் செய்ய சென்னை டி.வி.எஸ் நிறுவன மேலாண்மை இயக்குநர் உயர்திரு. வேணு சீனிவாசன் அவர்கள் உபயமாக ரூபாய் இருபத்தைந்து இலட்சம் வள்ளல் உள்ளத்தோடு வழங்கினார்கள்! திருவரங்கம் இராஜகோபுரம் திருப்பணியை ரூபாய் முப்பது இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை சுவாமி கொடிமரம் மற்றும் அதன் கவசத்திற்குச் சுமார் 9 கிலோ எடையுள்ள தங்கரேக் வேயும் திருப்பணியையும் உயர்திரு. வேணுசீனிவாசன் அவர்களே உபயமாகச் செய்து கொடுத்துள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமின்றி தமிழகத்தில் உள்ள நவ திருப்பதிகள், படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில், இன்னும் எண்ணற்ற திருக்கோயில் களின் திருப்பணிகளை கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் அமைதி புரட்சியாகச் செய்து கொண்டிருப்பவரும் திரு. வேணு சீனிவாசன் அவர்களே!

திருத்தணிகை மூலவருக்கு ஏற்கனவே உள்ள சுவர்ணபந்தனத்துடன் புதிதாக சுவர்ணபந்தனம் செய்ய தீர்மானிக்கப்பட்டவுடன், மிகவும் மகிழ்வோடும், ஆர்வத்தோடும், கொடையுள்ளத்தோடும் ஆன்மீகப் பற்றோடும் சென்னை எஸ்.ஜி.எம். நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு உதயகுமார் அவர்கள் 1009 கிராம் எடையுள்ள தங்க சுவர்ண பந்தனம் வழங்கினார்கள். அது திருத்தணிகை மூலவர் சுப்ரமணிய சுவாமிக்கு 5.7.2003 அன்று இரவு சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், துறை அதிகாரிகள் மற்றும் பக்த பெருமக்கள் முன்னிலையில் முறைப்படி சாத்துப்படி செய்யப்பட்டது. இவர் 2001-இல் திருவரங்கம் திருக்கோயில் ''மகா சம்ப்ரோக்ஷணம்'' நடைபெற்ற 15.3.2001 அன்று காலை முதல் இறுதி வரை நாள் முழுவதும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர்சாதம் என பிரசாதங்கள் வழங்கினார். திருவரங்கம் திருக்கோயில் திருப்பணிக்கும் ரூபாய் ஐந்து இலட்சம் நன்கொடை வழங்கினார். சமயபுரத்திற்கருகில் பிறந்த இவர் தற்போது சமயபுரம் திருக்கோயிலுக்கும் திருப்பணியில் கணிசமான அளவில் பங்கு கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்.

***

# நீள் சௌக்யம் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு நல்கும் சுவாமிமலை

- முனைவர் த. அமிர்தலிங்கம்

மெய்கண்ட தெய்வம் எனப் போற்றப்படும் முருகப்பெருமான் கோயில் கொண்டு விளங்கும் ஆறுபடை வீடுகளில் நான்காம் படை வீடாகத் திகழும் திருத்தலம் ஞானத்தபோதனர்கள் சேரும் சுவாமி மலைத் திருத்தலம் ஆகும்.

''ஏர்'' என்பதற்கு அழகு என்பது பொருள் ஆகும். ஞானத்தால் பொலியும் பேரழகுமிக்க திருத் தலம் ஆதலால் இத்தலத்திற்குத் ''திருஏரகம்'' என்பது திருப்பெயர் ஆகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறப்புற் றிருந்த திருவேரகத் திருத்தலத்தை நக்கீரர் பெருமான் சங்க இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் சிறப் புறப் பாடிப் போற்றியிருக்கின்றார்.

''யாக முனிவர்க்கு உரிய காவற்காரன்'' என்று அருணகிரிநாதர் ''வேளைக்காரன் வகுப்''பில் முருகப் பெருமானைப் போற்றிப் புகழ்கின்றார். 48 வய துடைய அந்தணப் பிரம்மச்சாரிகள் காருகபத்தியம், ஆகவனியம், தட்சிணாக்கனி என்னும் மூத்தீ வேள்வி செய்து உச்சி கூப்பிய கையராய் முருகவேளின் ஆறெழுத்து அடங்கிய வேதத்தை நன்கு ஓதி மலர் தூவி வழிபடுகிறார்கள். அவ்வந்தணர்களின் வழி பாட்டினை உவந்து ஏற்று ஏரகத்திருத்தலத்தில் எழுந்து அருளியுள்ளான் எம்பெருமான் முருகன் என்று திரு முருகாற்றுப்படையில் முருகப் பெருமான் யாகமுனிவர் களுக்கு உரிய காவற்காரனாக எழுந்தருளியிருக்கும் சிறப்பைப் போற்றியுள்ளார் நக்கீரர் பெருமான்.

திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பெருமான் நான்காம் படைவீடாக ஞானதபோதனர்கள் சேரும் சுவாமிமலையைக் காட்டு கின்றார். திருவேரகத்து முருகனைப் போற்றும் திருமுருகாற்றுப்படைப் பாடற்பகுதி பின் வருமாறு :

''இரு மூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு
அறனில் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்று வகைக் குறித்து முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல்
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சி கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏத்திப்பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்.''

இத்தகைய திரு ஏரகத்து முருகப் பெருமானே ''திருமுருகாற்றுப்படை'' பாட நக்கீரருக்கு ''உலகம் உவப்ப'' என அடி எடுத்துக் கொடுத்தவர்; அவரே நக்கீரருக்குத் தமிழ்இலக்கணங்கள் கற்பித்தவர் என்று போற்றுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

''வளவாய்மை சொற்ப்ர பந்தம் உள கீரனுக்கு உகந்து
மலர்வாயில் இலக்கணங்கள் இயல்போதி
அடிமோனை சொற்கிணங்க 'உலகம் உவப்ப'
என்றுன்
அருளால் அளிக்கும்கந்த பெரியோனே!''

என வரும் திருப்புகழ்ப் பாடற்பகுதி நக்கீரருக்கு அருளிய நற்றமிழ்க் கடவுள் திருஏரகப் பெருமான் என்பதை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

இத்தகைய திருஏரகத் திருத்தலத்திற்கும் சுவாமி மலை, குருமலை எனவும் பெயர்கள் வழங்கி வருகின்றன.

சிவபெருமானுக்குக் குமரன் குருவாக வீற் றிருந்து பிரணவ மந்திரத்தை அவர் செவிகுளிர உபதேசித்தபோது சிவபெருமான் முருகனை நோக்கி ''நீயே சுவாமி'' என்று கூறிப் போற்றியபடியால் முருகனுக்கு ''சுவாமிநாத சுவாமி'' எனவும், குமர குருபரன் எனவும் பெயர்கள் வழங்குகின்றன.

சுவாமிநாத சுவாமி வீற்றிருக்கும் திருத் தலமே என்று ''சுவாமிமலை'' எனச் சிறப்புடன் வழங்கப்பட்டு வருகின்றது. அருணகிரிநாத சுவாமி கள் தாம் சுவாமி மலையைப் பாடியுள்ள 38 திருப்



புகழ்ப் பாடல்களில் திருஏரகமே சுவாமி மலை என்பதை நன்கு தெளிவுபடுத்திப் பாடியுள்ளார்.

''ஏரக வெற்பு என்னும் அற்புதமிக்க
சுவாமிமலைப் பதி''

என்று ஏரகமே சுவாமிமலை எனத் தெளிவுபடுத்தும் அருணகிரி நாத சுவாமிகள், ஈரேழு பதினான்கு உலகில் வாழும் பக்தர்களும் கேட்டது கேட்டபடி சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு தந்து திருவருள் புரிபவர் சுவாமிநாத சுவாமி என்பதையும் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றார்.

''பதினாலு உலகத்தினில் உற்றுறு பக்தர்கள்
ஏதுநினைத்தது மெத்த அளித்தருள் இளையோனே''

''.... நீள்சௌக்யம்
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவஞான முத்தி பரகதியும் நீ கொடுத்து
உதவி புரிய வேணும் நெய்த்த வடிவேலா''

எனவரும் திருப்புகழ்ப் பாடற்பகுதிகள் சுவாமி மலைத் திருத்தலம் வழிபடும் மெய்யன்பர்கள் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்று உயர்வர் என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

சிவபெருமான் முருகப் பெருமானைத் ''தகப் பன் சுவாமி''. என்று பெருமைப்படுத்திச் சிறப்பித்த இத்திருத்தலத்தின் மகிமையை எடுத்துக் கூற யார்க்கும் இயல்வது அரிது எனலாம். அத்தகைய அற்புதமான நிகழ்ச்சியைக் கந்தபுராணம் நமக்கு மிக விரிவாக எடுத்து விளக்குகின்றது.

சிவபெருமானின் திருவருள் பெற வேண்டி நாரத முனிவர் ஒரு வேள்வி செய்தார். அரி, அயன், இந்திரன், அருந்தவர் அனைவரையும் அழைத்து வேதாகம விதிப்படி வேள்வி செய்தார் நாரதர். வேள்வி செய்யும் போது மந்திரம் மாறுபட, யாகத்தீயிலிருந்து செந்நிறத்தில் ஓர் ஆட்டுக்கடா கோர உருவத்துடன் தோன்றி அட்டத் திக்குகளும் நடுங்க ஆர்ப்பாட்டம் செய்தது.

அந்த ஆட்டினைக் கண்டு அஞ்சிஓடிய நாரதரும் மற்ற முனிவர்களும் தேவர்களும் கயிலை மலைக்கு ஓடினர். அங்கு இலக்கத்தொன்பது வீரர் களுடன் கூடி விளையாடிக் கொண்டு இருந்த முருகப் பெருமானைக் கண்டு அவர் தாமரைத் திருவடியில் வீழ்ந்து துதித்தனர்.

''மூவர்கள் முதல்வா ஓலம், முக்கண்ணன்
புதல்வா ஓலம்
சேவலங் கொடியாய் ஓலம், சிறந்த சிற்பரனே ஓலம்
தேவர்கள் தேவே ஓலம், தெய்வ நாயகனே ஓலம்
ஆவலுற் றருள்வாய் ஓலம் அறுமுகா ஓலம்,
ஓலம்.''

நாரதருடைய ஓலம்கேட்டு, ''அஞ்சாதீர்கள்'' என அபயம் தந்து வீரவாகு தேவரை ஆட்டினைப் பிடித்து வருமாறு ஏவினார் முருகப்பெருமான். பற் பல உலகங்கள் திரிந்து ஆர்ப்பாட்டம் புரிந்த ஆட்டினை அதன் கொம்பைப் பற்றி அநாயசமாகப் பற்றிக் கரகர என்று இழுத்து கயிலை மலைக்குக் கொண்டுவந்து சேர்த்தார் வீரபாகு தேவர்.

யாகமுனிவருக்கு உரிய காவற் காரனாகிய முருகப் பெருமான் புன்முறுவல் பூத்து ''ஆட்டுக்கடா நம்மிடம் வந்து விட்டது, இனி நீங்கள் யாகத்தைச் செவ்வனே செய்து முடியுங்கள்'' என்று அருளிச் செய்தார்.

தேவர்களும் ''எம்பெருமானே! இவ்வாட்டுக் கடாவை வேறெங்கும் விடாமல் தாங்கள் வாகனமாக ஏற்றருள வேண்டும்'' என்று வேண்ட, அக்கினிப்பூ என்று வேதங்கள் கொண்டாடும் முருகப் பெருமான், அக்கினி தேவனின் வாகனமாகிய ஆட்டைத் தமக்கு உரிய வாகனமாக ஏற்றுக்கொண்டார் எனக் கந்த புராணம் கூறுகின்றது.

முருகப்பெருமான் மும்மலங்களை வென்ற வர். ஆகவே மயில், ஆடு, யானை என அவருக்கு மூன்று வாகனங்கள் உள்ளன.

ஆணவமலம் மயில், கன்மமலம் யானை, மாயா மலம் ஆடு., இம் மும்மலங்களையும் வென்ற வர் ஆகையால் முருகப் பெருமானுக்கு மயில், யானை, ஆடு ஆகிய மூன்றும் வாகனங்கள் ஆகும்.

நாரதரின் வேள்வியைக் காத்து ஆட்டுக் கடாவை வாகனமாகக் கொண்ட முருகப் பெருமான் கயிலை மலையில் திருவோலக்கம் கொண்டிருந்த வேளையில், அங்கு சிவபெருமானை வணங்க வந்த நான்முகன் செவ்வேள் பெருமானைக் கண்டு யான் எனது எண்ணும் ஆணவத்தால் முருகப்பெருமானை வணங்காமல் சென்றான்.

சிவபெருமானைத் தரிசித்து மீளும்போதும் மற்றமற்ற தேவர்கள் எல்லாம் ஆறுமுகப்பெருமானின் அடிமலர் தொழுது தோத்திரம் செய்து மீள, பிரமன் ''இவன் ஒரு பாலன் தானே! இவனை நாம் ஏன் வணங்க வேண்டும்?'' என்று இறுமாந்து வணங்காமலே சென்றான்.

அயனின் செருக்கு அகற்றி நல்லருள் பாலிக்கத் திருவுளம் கொண்ட அறுமுகச் சிவமான முருகப் பெருமான் பிரமனை அழைத்தார். ஆறுமுகப்பெருமான் அழைத்த பிறகே அவர் அருகில் வந்த பிரமன் அகங்காரத்துடன் சிறிதே கைகுவித்து வணங்கிடாத பாவனையாக வணங்க முருகப்பெருமான் ''நீ என்ன தொழில் செய்கின்றாய்?'' என்று கம்பீரக் குரலில் வினவினார்.

சற்றே பயம்கொண்ட பிரம்மன் ''சிவபெருமான் ஆணையினால் படைக்கும் தொழில் புரிகின்றேன்'' என்று கூறினான்.

''படைப்புத் தொழிலை மேற்கொண்டிருக்கும் உனக்கு வேதம் வருமோ? எங்கே முதல் வேதமாகிய இருக்கு வேதத்தினைக் கூறு'' என்று கட்டளை யிட்டார் கந்தக்கடவுள்.

வேதத் தொடக்கமாக ''ஓம்'' என்ற குடிலை மந்திரத்தைக்கூறி இருக்கு வேதத்தைச் சொல்ல பிரம்மன் ஆரம்பிக்க ''நில்! ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருள் கூறு'' என்று ஆணை பிறப்பித் தார் முருகப் பெருமான்.

''ஓம்'' எனும் பிரணவ மந்திரத்தின் பொருள் வேதக் கடவுளான பிரம்மனுக்கே தெரியவில்லை. தன் எட்டுக் கண்களும் திகைக்க விழித்து நின்றான் பிரம்மன்.

''பிரணவத்தின் பொருளை அறியாத நீ படைத்தல் தொழிலை எவ்வாறு புரிவாய்?'' என்று கேட்டவாறே பிரம்மனின் நான்கு தலைகளிலும் தம் பன்னிரு திருக்கரங்களைத் தலைக்கு மூன்று வீதம் வைத்து ஓங்கிக் குட்டினார் முருகப் பெருமான்.

''எட்டொ ணாதவக் குடிலையின் பயன்
இனைத்தென்றே
கட்டுரைத்திலன் மயங்கலும் இதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வது எத்தன்மைய தோஎனாச் செவ்வேள்
குட்டினான் அயன் நான்குமா முடிகளும் குலுங்க''

பிரம்மனின் எட்டு நாசித் துவாரங்களிலும் உதிரம் வந்தது. அவரது தலைமுடி விபூதிபோல் துகள் துகளாய் உதிர்ந்தது. பிரம்மனின் அகங்காரம் முழுவதும் தொலைந்து அவன் புனிதன் ஆகும் வண்ணம் தம் திருவடியால் எற்றித் தள்ளி வீரவாகு தேவரைக் கொண்டு பிரம்மன் கைகளிலும், கால்களிலும் விலங்கு கள் பூட்டி, கந்த வெற்பில் ஒரு குகைக்குள் கொண்டு போய் சிறைவைத்து விட்டார் செவ்வேள் பெருமான்.

முத்தொழிலுக்கும் தலைவராம் முருகப் பெருமான் ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டு படைப்புத் தொழிலையும் தாமே மேற் கொண்டார்.



ஒரு திருக்கரம் ஜபமாலை தாங்க, ஒரு திருக்கரம் கமண்டலம் தாங்க, மற்ற இரு திருக்கரங்கள் வரதமும் அபயமும் வழங்க, படைப்புத் தொழிலை மேற்கொண்டார் முருகப்பெருமான்.

''ஒரு கரம் தனில் கண்டிகை வடம்பரித்து ஒருதன்
கரந்தனில் குண்டிகை தரித்து இருகரங்கள்
வரதமோடு அபயம்தரப் பரம்பொருள் மகனோர்
திருமுகங் கொடு சதுர்முகன் போல் விதி
செய்தான்.''

''உயிரினுக்கு உயிராகியே பரஞ்சுடர் ஒளியாய்
வியன்மறைத் தொகைக்கு ஈறதாய் விதிமுதல்
உரைக்கும்
செயலினுக் கெல்லாம் ஆதியாய் வைகிய
செவ்வேள்
அயன்எனப் படைக்கின்றதும் அற்புதம் ஆமோ?''

எனக் கந்தபுராணம் பிரம்மசாத்தனாய் முருகக்கடவுள் உயிர்களைப் படைத்த அற்புதத்தை அழகுற விவரிக்கின்றது.

பிரம்மதேவனை முருகக் கடவுள் சிறை வைத்ததையும் அவரே படைப்புத் தொழிலை மேற்கொண்டிருத்தலையும் திருமால் உள்ளிட்ட தேவர்கள் யாவரும் சென்று சிவபெருமானிடம் எடுத்து உரைத்து முழுமுதற் கடவுள் என முருகனை அறியாது மயங்கிய பிரம்மனை மன்னித்து அவரைச் சிறையினின்று விடுவித்துத் திருவருள் புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்.

புன்முறுவல் பூத்த சிவபெருமான் ''சிவம் வேறு குமரன் வேறு என்று பேசுவோர் மடவோர். இவ்வுண்மையை உணர்த்தி பிரம்மன் நல்லுணர்ச்சி பெற்று உய்யும் பொருட்டே நம் குமாரன் பிரம்மனைத் தண்டித்துச் சிறையில் அடைத்தானே அன்றி, தன்னை வணங்கவில்லை என்பதற்காக அல்ல, வேதம் எம்மை ''சதாசிவோம்'' என்று ஒரு முறையே பிரணவ சப்தத்தால் அழைக்கின்றது. ஆனால் நம் குமரனை ''சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்! சுப்ரஹ்மண்யோம்'' என்று மூன்றுமுறை பிரணவத்தில் இணைத்துக் கூவியழைக்கின்றது. இதனையறியாது தருக்குற்ற பிரம்மனைச் சிறையினின்று விடுவிப்பது எவ்வாறு?'' என்று திருவாய் மலர்ந்து கூறியருளினார்.

''எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்
பிரமனுக்கும் ஈசன் என்னத்
தக்கமுதற் பரப்பிரமஞ் சதாசிவன் ஓம் எனவேதம்
சாற்றுமல்லால்
முக்கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணியன்
ஓமெனவும் முக்காற் கூறும்
இக்கருத்தை அறியானை எவ்வாறு
விடுவிப்பாய் இயம்புமின்னோ?''

என்று வினவிய பரம தயாபரர் ஆன சிவ பெருமான் பிரம்மனை விடுவித்து அனுப்புமாறு கேட்டு முதலில் நந்திதேவரை அனுப்பினார்.

முருகக்கடவுள் ''நான்முகனைச் சிறை நீக்கேன்; இங்கு நின்றால் உன்னையும் சிறையில் இடுவேன்'' என வெருட்ட, நந்திதேவர் திருக்கயிலை மீண்டு நிகழ்ந்ததைக் கூற, சிவபெருமானே திருமால் முதலான தேவர்கள் முனிவர்கள் யாவரும் தொடரக் கந்த வெற்பை சென்று அடைந்தார்.

''எந்தையார் வந்தார்!'' என எதிர் கொண்டு வரவேற்று திவ்விய சிங்காசனத்தில் எழுந்தருளச் செய்த சிவகுமாரரிடம் சிவபெருமான் ''பிரம்மனைச் சிறை நீக்கக் கடவாய்'' என்று திருவாய் மலர்ந் தருளினார்.

''எந்தையே! பிரணவத்தின் பொருள் தெரியாத வன் உலகத்தைப் படைப்பது பேதமை அன்றோ!'' அகந்தை நீங்காத அயனைச் சிறையினின்றும் வெளியே விடுவது முறையோ!'' என்று வினவினார்.

''நாமே வந்து கூறியும் பிரம்மனைச் சிறைநீக்க மறுக்கலாமோ?'' என்று வற்புறுத்த தந்தையின் கட்டளையை சிரமேற்கொண்ட முருகப் பெருமான் தம் பூதகணங்களிடம் ''பிரம்மனைச் சிறைநீக்கி நம்முன் கொண்டுவாருங்கள்'' என்று ஆணை பிறப்பித்தார்.

பூதங்களும் சென்று குகைக்குள்ளே விலங் கிடப்பட்டு ஒடுங்கியிருந்த பிரம்மனைச் சிறை விடுத்து முருகவேள் திருமுன் அழைத்து வந்தனர்.

முருகவேள் ஆணவம் அடங்கிய பிரம்மனின் கையைப் பிடித்துச் சிவபெருமான் திருமுன் விடுத் தார்.

மூவர்க்கும் ஒரு தம்பிரான் முருகப் பெருமானே என ஞானம் பெற்ற பிரம்மதேவன் ''கருணைக் கடலே! தேவரீருடைய திருக்குமாரர் அடியேனுக்கு அளித்த இத்தண்டனை சிறைவாசம் அல்ல. தவச்சாலை வாசம். அவர் திருவடி தீண்டியது ஸ்பரிச தீட்சை அதனால் யான் எனது என்னும் அகந்தை அழிந்து தீவினைகள் நீங்கப் பெற்றேன். சித்த சுத்தி பெற் றேன். அடியேன் புனிதன் ஆனேன்'' என்று கூறி சிவ பெருமானையும், சிவ ஆறுமுகத்தையும் சீரிய சிந்தை யோடு வழிபட்டுநின்றான்.

நல்ல ஞானம் பெற்ற நான்முகன் மீண்டும் பரம்பொருள் கட்டளையால் படைப்புத் தொழில் ஆற்றும் பணி பெற்று உய்ந்தான்.

குமரக்கடவுளைத் தம் திருக்கரத்தினால் அணைத்து மடியின்மேல் இருத்திக்கொண்ட சிவ பெருமான் ''குழந்தாய்! பிரம்மனும் அறியாத பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந் தால் சொல்வாயாக'' என்று வினவியருளினார்.

''அண்ணலே! உலகமெலாம் பெற்று அருளிய அன்னையாகிய எம்பிராட்டிக்குத் தாங்கள் பிறர் அறியாத வண்ணம் உபதேசித்து அருளிய பிரணவத் தின் பொருளை இரகசியமாகக் கூறவேண்டுமே அன்றி,யாவரும் கேட்கும் வண்ணம் கூறவது முறை யாகுமா? முறைப்படி கேட்டால் சொல்வோம்'' என் றார் தகப்பன் சுவாமியான முருகப் பெருமான்.

''குழந்தாய்! நீ கூறுவது முற்றிலும் பொருந்தும்'' என்று கூறிய சிவபெருமான் தம் இருக்கை விட்டு எழுந்து கைகளைக் குவித்து, தலையைத் தாழ்த்தி, வாய் பொத்திச் செவி சாய்த்து ''சுவாமிநாதா! பிரணவ மந்திரத்தின் பொருளைக் கூறியருளுக'' என்று பணி வுடன் வினவ, முருகப்பெருமானும் பிரணவ மந்திரத் தின் பொருளைத் தம் அமுதமான மழலை மொழி யால் அற்புதம் அற்புதமாகத் தந்தைக்குக் குருநாத ராக வீற்றிருந்து உபதேசித்து அருளினார் என்று கந்த புராணம் கூறுகின்றது.

''நாத போற்றி என முது தாதை கேட்க அனுபவ
ஞான வார்த்தை அருளிய பெருமாளே''

''அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர ஒளிதிகழ்
அறிவை அறிவது பொருளென அருளிய
பெருமாளே''

என்று அருணகிரிநாதரும் தந்தைக்கு மந்திரம் உபதேசித்த ''தகப்பன் சுவாமி''யின் அருமைபெருமை களைப் பற்பல திருப்புகழ்களில் அற்புதம் அற்புத மாகப் பாடிப் போற்றுகின்றார்.

இத்தகைய ஞானானந்த அற்புதம் நிகழ்ந்த திருத்தலம் என்பதால்தான் திருவேரகத் திருத்தலத்தை சுவாமிமலை, குருமலை, குருகிரி என்று போற்று கின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

சுவாமிநாத சுவாமி தேவர்களில் சிறந்தவரான சிவபெருமானுக்கு பிரணவமந்திரம் உபதேசித்ததைப் போன்றே, முனிவர்களில் சிறந்தவரான அகத்திய ருக்கும், மனிதர்களில் சிறந்தவரான அருணகிரிநாத ருக்கும் உபதேசித்தருளினார் என அறிகிறோம்.

''நிருப குருபர குமர என்றென்று பக்திகொடு
பரவ அருளிய மவுன மந்திரம் தனைப் பழைய
நினது வழி யடிமையும் விளங்கும்படிக்கு
இனிது உணர்த்தி யருள்வாயே''



சுவாமிமலையில் 23.7.03 அன்று சிறப்புற நடைபெற்ற ஆடிக் கிருத்திகை விழாவில் ''தகப்பன் சுவாமி'' எனும் பொருளில் சிறப்புரை ஆற்றிய ''திருக்கோயில்'' இதழாசிரியர் முனைவர் த. அமிர்த லிங்கம் அவர்களுக்குத் திருக் கோயிலின் உதவி ஆணையர் / செயல் அலுவலர் திருமிகு அ.தி. பரஞ்ஜோதி, எம்.ஏ., பி.எல். அவர்கள் மலர்மாலை அணிவிக் கின்றார்

என்று வேண்டிய அருணகிரிநாதருக்கு பிரணவ மந்திர உபதேசம் புரிந்து அருள் புரிந்துள்ளார் சுவாமிநாத சுவாமி.

சுவாமிமலையில் முருகப்பெருமான் அருணகிரி நாதருக்குத் திருவடி தீட்சையும் செய்து அருள் புரிந்துள்ளார். இதனையும் அருணகிரிநாதர் -

''தகையா தெனக்குன் அடிகாண வைத்த
தனி ஏரகத்தின் முருகோனே
தருகாவிரிக்கு வடபாரி சத்தில்
சமர்வேல் எடுத்த பெருமாளே''

எனப் பாடிப் போற்றியிருக்கக் காணுகின்றோம்.

முருகப் பெருமான் ஞானமே வடிவானவன்.

''ஞானமே வடிவாகிய நாயகன் இயல்பை
நானும் நீயும் அறிதும் என்றால் அஃதெளிதோ?
மோனம் தீர்கலா முனிவரும் அறிகிலர் இன்னும்
தானும் அறிகிலன் தன்பெரும் தகைமை''

என்று கந்தபுராணம் ஞான ரூபமான முருகனைப் போற்றிக் கொண்டாடுகின்றது.

அத்தகைய முருகப்பெருமான் ஞானதண்டாயுத பாணியாக பழநியிலும், தகப்பன் சுவாமியாக சுவாமி மலையிலும் வீற்றிருக்கும் சிறப்புப் பற்றியே அருணகிரிநாதர் பழநிமலையையும் சுவாமிமலை யும் இணைத்து

''அதிசயம் அநேக முற்ற பழநிமலை மீது உதித்த
அழக திருவேரகத்தின் முருகோனே!''

என்று பாடியுள்ளார்.

ஞானத்தபோதளர்கள் சேரும் சுவாமி மலைக்குச் சென்று சுவாமி நாத சுவாமியின் சரண கமலாலயத்தை அரைநிமிட நேரம் தியானம் செய்தாலும்

''நீள்சவுக்கியம்
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவஞான முத்தி பரகதியும்''

பெற்று உய்யலாம் என்று அறிவுறுத்துகின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

சுவாமிநாதப் பெருமானை
அறிவோம், உணர்வோம்
சுவாமிநாத சுவாமியால்
வளர்வோம், வாழ்வோம்
சுவாமிநாத சுவாமியின் திருவருளால்
மகிழ்வோம், உய்வோம்

ஒவ்வொரு சொல்லிலும் ''ஓம்'' எனும் பிரணவமந்திரம் உள்ளது. இப்பிரணவ மந்திரத்தை உணர்வதும், உய்வதும் நம் வாழ்க்கைத் தத்துவம் எனலாம்.

இன்றே சுவாமிமலை சென்று
சுவாமிநாத சுவாமியை வழிபடு ''ஓம்''
நன்றே ஞானமும் நல்வாழ்வும் பெற்று
உய்வடை ''ஓம்''.

***

# இறைவனிடம் கை ஏந்துங்கள் – அவன் இல்லை என்று சொல்லுவதில்லை.

- கலைமாமணி மா. லட்சுமணன்

நீதிக்கதை

ஊர்க்கோடியில் துறவியொருவர் வாழ்ந்து வந்தார். மனித நேயத்தில் பற்று கொண்டவராக வாழ்ந்ததால் தன்னைக் காண வருவோரின் பசிதீர்க்க எண்ணுவார். இருப்பதைக் கொடுப்பார். நாளடைவில் கூட்டம் அதிகமாக வர ஆரம்பித்தது. இவர்களுக்கு அன்னமளிக்க முடியவில்லையே என வருந்தினார். நெடுந்தொலைவிலிருந்தெல்லாம் பக்தர்கள் வந்து தரிசித்து பசியோடு திரும்புகிறார்களே என்று கவலைப் பட்டார். அந்த ஊரை ஆளும் மன்னனைச் சந்தித்து உதவி கேட்டால் என்ன? என்று அவருக்குத் தோன்றியது.

மன்னனைக் காண அரண்மனைக்குச் சென்றார். அரண்மனைக்குள்ளே அழகிய கோவில் ஒன்று இருந்தது. மன்னன் அந்தக் கோவிலுக்கு வந்திருப்பது தெரிந்தது.

துறவியைச் சந்தித்த சேனாபதி ''மண்டபத்தில் உட்காருங்கள். மன்னர் பூஜை முடித்து வெளியே வருவார். அப்போது அவரை தரிசித்து உங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்'' என்று கூறிப் போனார்.

துறவியும் மண்டபத்தில் அமர்ந்தார். கோவிலுக்குள் மன்னர் - பிரார்த்தனை செய்வதை கவனித்தார் துறவி.

வாய்விட்டு வேண்டிக் கொண்டிருந்தார் மன்னர்.

சிறிது நேரம் இதைக் கவனித்து விட்டு - விருட்டென எழுந்து வெளியே நடந்தார் துறவி.

இவர் செல்வதைக் கவனித்த சேனாபதி ஓடி வந்து - ''பூஜை முடியப் போகிறது. மன்னர் வரப் போகிறார் - அவரைப் பார்க்காமல் போகிறீர்களே!....'' என்றார்.

''பார்க்க வேண்டுமென்று அப்போது தோன்றியது - பார்க்க வேண்டாமென்று இப்போது தோன்றுகிறது. நான் வருகிறேன்'' எனப் புறப்பட்டார் துறவி.

சேனாபதியோ விடுவதாக இல்லை. ''உங்களுக்கு உதவி செய்தால் தான் என் மனம் திருப்தியடையும். மன்னரைப் பார்க்காமல் நீங்கள் போகக் கூடாது'' என வேண்டினார்.

சேனாபதி எவ்வளவு வேண்டியும் துறவி கேட்பதாக இல்லை.

இவர்கள் போராடிக் கொண்டிருந்த போது மன்னரே வெளியே வந்துவிட்டார். நடந்த விபரத்தை தெளிவாக மன்னரிடம் கூறினார் சேனாபதி.

''சுவாமி! உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை மனம் விட்டுக் கேளுங்கள். தடையின்றித் தருகிறேன்'' என்றான் மன்னன்.

''வேண்டாம் பிறிதொரு சமயம் வருகிறேன்'' என்று புறப்பட்டார் துறவி.

மன்னனோ விடுவதாக இல்லை. ''சுவாமிகள் மனம் புண்படும் அளவுக்கு இங்கு ஏதோ நடந்திருக்கிறது.

அதுபற்றி நான் அறிந்து கொள்ள வேண்டும். துறவியோ உண்மைக்காரணத்தைக் கூறாது புறப்படுகிறார். உண்மையை அறிந்து சொல்லுமாறு சேனாபதிக்கு உத்தரவிடுகிறேன்'' என்றார் மன்னர்.

உண்மையைச் சொல்லாவிட்டால் மன்னன் விடமாட்டான் என்ற நிலையை உணர்ந்து கொண்ட துறவி

''மன்னா தங்களைக் கண்டு உதவி பெற்று என்னைத் தேடிவரும் பக்தர்களுக்கு அன்னமிட எண்ணி வந்தேன். உதவி யென்பது கவுரமான வார்த்தை பச்சையாகச் சொன்னால் இது பிச்சை தான். தங்களிடம் பிச்சை கேட்பதில் தவறில்லை என்று எண்ணித்தான் வந்தேன். கோவிலுக்குள் உரத்த குரலில் இறைவா! செல்வத்தைக் கொடு! செல்வத்தைக் கொடு! என்று நீங்கள் பிச்சை கேட்பது தெரிந்தது. கேட்கும் இடம் தான் வேறு! என்னைப் போல . நீங்களும் ஒரு பிச்சைக்காரர்தான்.

பிச்சைக்காரனிடம் பிச்சை கேட்பது மகா கேவலம். நான் வருகிறேன்'' என்று புறப்பட்டு விட்டார் துறவி. மன்னன் சிந்தித்தபடி சிலையாக நின்றான்!

* * *

# இலக்கியங்களில் விநாயகர்

- டாக்டர் டி. செல்வராஜ்

''முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே''

இது அருணகிரிநாத சுவாமிகளின் அருள் வாக்கு.

அகத்தியர் முத்தமிழ் நூல்கள் பலவற்றை இயற்றினார். அவற்றை ஓதுவதற்காக விநாயகர் மேரு மலையில் தம் தந்தத்தால் பொறித்து வைத்தாராம்.

முதல்வன் முத்தமிழைப் பயின்றார். அந்த முத்தமிழும் முதல்வனைப் போற்றுகிறது.

**வேதகாலம்:**

விநாயகர் வழிபாடு காலத்தைத் துல்லியமாகக் கணிக்க முடியாத பழமை வாய்ந்தது. வேத கால முதலே அது வழக்காற்றில் இருந்தது.

***(1) ரிக் வேதம்:*** இதில் கணபதி என்ற பெயர் இருமுறை வருகிறது. சூழ்நிலையைக் கருத அப் பெயர் இந்திரனைக் குறிக்கிறது.

***(2) ஐத்ரேய பிரமாணம்:*** இந்த நூலிலும் ''கணபதி'' என்ற பெயர் காணப்படுகிறது.

***(3) மைத்திராயணி சமிதை:*** இதில் அத்தி முகன், தந்தி என்ற பெயர்கள் உள்ளன. அத்திமுகன் = யானை முகன்; தந்தி = தந்தமுடையவன். இவை கணபதியைக் குறித்தன.

***(4) யாக்ஞவல்ய ஸ்மிருதி:*** இந்நூல் இவரைச் சிவகணங்களின் பதி - தலைவர் என்றும், அம்பிகையின் மகன் என்றும் கூறுகின்றது.

***(5) மானவகிரிய சூத்திரம்:*** இந்நூல் கணபதியை அழிக்கும் சக்தியாகக் காட்டுகிறது. இவர் விக்கினங்களை நீக்குகின்ற ''விக்னேஸ்வரர்'' ஆவார்.

இவ்வாறு வேதங்களிலும், புராணங்களிலும் மற்ற நூல்களிலும் கணபதியைப் பற்றிய கருத்துகள் விரவியும், பரவியும் வருகின்றன. இவை அனைத்தும் வடமொழிச் சார்புடையன.

**விநாயகர் வழிபாட்டின் தோற்றம்**

விநாயகர் வழிபாட்டின் தோற்றத்தைப் பற்றிய கொள்கைகள் பல; இவற்றுள் மிக முக்கியமான சில வருமாறு:

***(1) சூரிய வழிபாடு:*** விநாயகர் வழிபாடு சூரிய வழிபாட்டுடன் தொடர்புடையது. உருவக நிலையில், அவரது வாகனமான எலி பேரிருள்; அதை அறவே அகற்றுகின்ற விநாயகர், சூரியன்.

***(2) மருதநில மக்களின் தெய்வம்:*** மருத நில வயல்களை யானைகள் நேர்முகமாகத் தாக்கும். எலிகள் மறைமுகமாகத் தாக்கும். இவற்றால் நொடிந்த மக்கள் யானைமுகனை உருவாக்கி வழிபட்டனர்; அவருக்கு எலியை வாகனமாக்கினர். இவ்வாறு அன்பு, பாசத்தால் கட்டுண்டது யானை; அடிமைத்தளையால் கட்டுண்டது எலி.

***(3) உயிரின வழிபாடு:*** சிங்கம், யானை, புலி, நாகம் முதலிய உயிரினங்களை மக்கள் பயபக்தியுடன் வழிபட்டனர். அவற்றைத் தெய்வங்களின் வாகனங்களாக்கி அடக்கினர். தெய்வங்களுடன் சார்த்தி அவைகளையும் வழிபடலாயினர். அச்சம் தணிந்தனர்.

மனித வடிவமும், விலங்கு வடிவமும் கலந்த கலப்பு வடிவங்கள் பேராற்றலுடையன என்று நம்பினர். இத்தகைய கலப்பு வடிவங்கள் சில சிந்து வெளி நாகரிகத்திலும் கிடைத்தன.

மனித (நர) உடம்பும், சிங்கத்தின் தலையும் இணைந்த வடிவம் அவதார நரசிங்கர் வடிவம். குள்ளமான, குண்டான இயல்பான நிலைக்குச் சற்று வேறுபட்ட மனித உடம்பும், யானையின் தலையும் ஒட்டிய ''நரயானையே'' விநாயகர்.

யானை முகமல்லாமல், மனித முகத்துடன் நரமுக விநாயகர் தில்லையில் தெற்கு வீதியிலும், திருச்செங்காட்டங்குடியிலும் திருக்காட்சி தருகின்றார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதுவும் ஒரு கலப்பு வடிவமே.



### பூத வழிபாடு:

சிலப்பதிகாரத்தில் சதுக்கப் பூத வழிபாடு கூறப்பட்டுள்ளது. இந்த வழிபாட்டிலிருந்து விநாயகர் வழிபாடு உருவானது என்பது மற்றொரு கொள்கை.

### சிவனும் விநாயகரும்:

ஆறுமுகச் சிவனை முருகன் என்று சான்றோர் கூறுகின்றனர். சிவனின் அம்சங்கள் முருகனிடம் நிறைந்திருப்பதைப் போல விநாயகரிடமும் நிறைந்துள்ளன. இருவரும் சடைமுடியுடையவர்; பிறை சூடிகள்; ஐம்முகம் கொண்டவர்; முக்கண்களையுடையவர். நடனக்கோலமும் இருவருக்கும் பொதுவாம்.

### சங்க காலம்:

சங்கப் பாடல்களில் விநாயகரைப் பற்றிய குறிப்புகள் மிகவும் குறைவு.

*(1) வெள்ளெருக்கிலையார்:* புறநானூற்றில் 233, 234 ஆம் பாடல்களை இயற்றிய புலவருக்கு ''வெள்ளெருக்கிலையார்'' என்பது பெயர். இது வெள்ளெருக்கை விரும்பி ஏற்கின்ற விநாயகரின் ஒரு பெயர்.

*(2) கடவுள்:* ''எருக்கம் பூக்கள் நல்லனவும் அல்ல; தீயனவும் அல்ல. குவிந்த பூங்கொத்துகளையும், புல்லிய இலைகளையும் கொண்ட எருக்கினது பூக்களைப் பக்தர் சூட்டினால், அவற்றைக் 'கடவுள்' மறுக்காமல் ஏற்றுக்கொள்ளும்'' என்று புறநானூறு (பாடல் 106) கூறுகிறது. இங்குக் 'கடவுள்' என்று குறிக்கப்பட்டவர் விநாயகரே. எருக்கை விரும்புகின்ற இவருக்கு 'எருக்கன்' என்பது ஒரு பெயராக விளங்குகின்றது.

### கி.பி. 2 ஆம் நூற்றாண்டு: மணிமேகலை:

விநாயகரைப் பற்றிய புராணக் கதைகள் தமிழகத்தில் மெல்லப் பரவின. அத்தகைய புராணக் கதைகளில் ஒன்று மணிமேகலையில் முதன் முதல் காணப்படுகிறது. அது வருமாறு:

அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை

(மணிமேகலை; பதிகம் 11, 12)

அகத்தியர் காவிரியாற்றைக் கமண்டலத்தில் அடக்கி வைத்தார். ஆற்று நீர் கிடைக்காத அனைவரும் வேண்ட விநாயகர் காக்கை வடிவெடுத்துக் கமண்டலத்தைக் கவிழ்த்தார். காவிரி பெருக்கெடுத்தது. விநாயகரின் பேரருட் கடலால் காவிரி ஓடத் தொடங்கியது.

### கி.பி. 5 ஆம் நூற்றாண்டு

முதல் விநாயகர்: கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் விநாயகர் வழிபாடு தமிழகத்தில் பரவத் தொடங்கிவிட்டது. பிள்ளையார்பட்டி கற்பக விநாயகரே தமிழகத்தின் மூத்த முதல் விநாயகர் என்பது பலரது கருத்து. இவர் பழமையான குடைவரை கோயில் ஒன்றில் எழுந்தருளியிருக்கின்றார். பாசம், அங்குசம் இல்லாமல், இரண்டு கைகளுடன், வலக்கையில் லிங்கத்துடன், வலம் புரிந்த துதிக்கையுடன் இவர் வீற்றிருக்கின்ற கோலம் சற்று வித்தியாசமானதே.

*(2) திருமந்திரம்:* திருமந்திரத்தில், விநாயகரைப் போற்றிக் காப்புச் செய்யுளை முதன்முதல் புனைந்தவர் திருமூலர். அச்செய்யுள் வருமாறு:

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருமூலருக்குப் பிறகு தோன்றிய புலவர் பலரும் காப்புச் செய்யுளை அமைத்து அதில் விநாயகரைப் போற்றலாயினர்.

### கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை :

**மூவர் தேவாரம்:**

மூவர் தேவாரத்தில் விநாயகரைப் பற்றிய மிகச் சில குறிப்புகள் காணப்படுகின்றன. எனவே, விநாயகர் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றிப் பரவத் தொடங்கி விட்டது என்பதும், அது சிவவழிபாட்டின் ஓர் அங்கம் என்பதும் தெளிவாகப் புலனாகின்றன.

**(1) திருஞான சம்பந்தர் தேவாரம்:**

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே,

(வலிவலப்பதிகம், பாடல் 5)

*பொருள்:* உமை பெண் யானையின் வடிவத்தை மேற்கொண்டாள். மிகுந்த வள்ளல் தன்மை வாய்ந்தவர் வாழ்கின்ற வலிவலத்தில் எழுந்தருளிய இறைவன் ஆண் யானையின் வடிவம் பெற்றான். தமது அடிகளைப் பணிகின்றவர்களின் துன்பங்களை நீக்குகின்ற கணபதி அவதரிக்குமாறு அருளினான். விநாயகரின் அவதாரத்தை மிகச் சுருக்கமாக இப்பாடல் கூறுகிறது.

*(2) திருநாவுக்கரசர் தேவாரம்:* திருநாவுக்கரசரும் விநாயகரின் அருள் வடிவத்தைப் பாடினார்:

''பலபல காமத்த ராகிப்
பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும்
கணபதி என்னும் களிறு''

(திருவதிகை வீரட்டானப் பதிகம், பாடல் 5)

*பொருள்:* ''பற்பல விருப்பங்களைக் கொண்டு, எப்போதும் பதைப்புடன் வாழ்கின்ற பக்தர்களின் மனத்துள்ளே புகுந்து, ஏற்கனவே குழம்பிய அவர்களது மனத்தை எதிர்நிலையில் தானும் திரிந்து குழப்பி அந்த மனத்தைத் தெளிவாக்கும் கணபதி என்னும் களிறு''.
கலமலக்கிடுதல் = கலந்து பிறழச் செய்தல்.

*(3) சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம்:* விநாயகர் கவர்ச்சியாகப் பொலிவதற்கு அவரது ''பேழைவயிறு'' ஒரு காரணமாம். பெருவயிறு எப்போதும் உணவுகளால் நிறைந்திருக்கும்படி உண்ணுவதேயன்றி வேறொன்றும் அறியாத விநாயகரை நகைச்சுவை ததும்பப் பாடுகின்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1. ''கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணப தியேல் வயிறு தாரி

(திருவோணகாந்தன் பதிகம், பாடல் 2)

2. ''எண்ணிலிஉண் பெருவயிறன்
கணபதிஒன் றறியான்''

(நாகைக் காரோணப் பதிகம், பாடல் 9)

*குறிப்புகள்:* 1. சங்கப் பாடல்களில் சிவனின் ஒரு மகன் முருகன் என்ற குறிப்பு உண்டு; மற்றொரு மகன் விநாயகர் என்பது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை.

2. காலப்போக்கில், சிவனின் மூத்த மகன் விநாயகர், இவர் யானைமுகன் என்று கருத்துகள் தோன்றி நிலைத்தன. யானை முகனின் அவதாரக் கொள்கையும் உருவானது. இவரை மூத்த நாயனார், மூத்த பிள்ளையார் என்று வழங்கினர்.

3. விநாயகரைப் பற்றிய குறிப்புகள் தனிப் பாடல்களிலும், பாடற் பகுதிகளிலும் உள்ளன. இக் குறிப்புகளும் மிகக் குறைவே.

4. கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரையில் விநாயகரைப் பற்றிய தனிநூல் எதுவும் தோன்ற வில்லை.

**ஆறு சமயங்கள்:**

1. காணபதியம் 2. கௌமாரம் 3. சைவம் 4. வைணவம் 5. சாக்தம் 6. சௌரம் என்பன ஆறு சமயங்கள் ஆகும். ஆறு வழிபாட்டு முறைகளை ஆறு சமயங்கள் என்று வகுத்தனர். ஆறு சமயப் பாகுபாடு கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழகத்தில் இருந்தது.

ஆறு சமயங்களை,

''ஆறு சமயங்கட்கு ஒரு தலைவன்''

என்று திருஞானசம்பந்தரும் (1:131:1)

''சமயமவை ஆறினுக்கும்
தலைவன் தான்காண்''

என்று திருநாவுக்கரசரும் ஆறு சமயங்களைக் குறித்து, அவற்றின் தலைவன் சிவனே என்று வரையறுத்தனர்.

கணபதியைப் பரம்பொருளாக ஏற்பது காண பதியம். கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முன் கணபதி பரம்பொருளாக உயர்ந்தார். அவரைப் போற்றுகின்ற காணபதியம் ஆறு சமயங்களில் ஒன்றாக அமைந்தது.

**ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகள் :**

**பதினோராம் திருமுறை :**

திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண் டார் நம்பிகள். இவர் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியி லும் வாழ்ந்தவர்.

பதினோராம் திருமுறையில் நாற்பது சிறு பிரபந்தங்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் மூன்று, விநாயகரைப் பற்றியன. அவை வருமாறு :-

1. **அதிரா அடிகள் :** இவர் அருளியது மூத்த பிள்ளையார் திரு மும்மணிக்கோவை.

2. **கபில தேவர் :** இவர் சங்கப்புலவர் கபில ரின் வேறானவர். இவர் அருளிய நூல் ''மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை'' என்பது. இந்நூல் மிக்க சுவையானது. பாராயணத்திற்கு ஏற்றது. தோன்றிய காலந்தொட்டே புகழ் பெற்றது.

மிகச்சிறப்பும், புகழும், செல்வாக்கும் நிறைந்த பாடல்களை உரையாசிரியர்கள் மேற்கோள்களாகப் பயன்படுத்துவர். இந்நூலின் 1. கனிய நினைவொடு (பாடல் 6) 2. நல்லார்பழிப்பில் (பாடல் 20) ஆகிய இருபாடல்கள், தொல்காப்பியச் செய்யுளியல் (நூற்பா 175) இளம்பூரணர் உரையில் மேற்கோள்களாக வருகின்றன.

3. **நம்பியாண்டார் நம்பிகள் :** இவர் திருநாரை யூரில் பிறந்தவர். இளமைக் காலத்தில் திருநாரையூர் பொல்லாப்பிள்ளையாரால் ஆட்கொள்ளப்பெற்று, செந்தமிழ்ப் புலமையுற்று, ''நம்பியாண்டார் நம்பி'' என்ற பெயரையும் பெற்றார். இவர் ''திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை'' என்ற நூலை அருளினார்.

**குறிப்புகள் :**

1. விநாயகரைப்பற்றிய சிறுபிரபந்த நூல்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றத் தொடங்கின.

2. முன்னர்த் தனிப்பாடல்களிலும், பாடற் பகுதிகளிலும் பாடப்பெற்ற விநாயகர் இப்போது மும்மணிக்கோவையையும், இரட்டை மணி மாலை களையும் அணிந்து சிறுபிரபந்தங்களிலும் 'உலா' வரலானார்.

3. ஒன்பதாம் நூற்றாண்டில் விநாயகர் வழி பாடு மேன்மையுற்று விளங்கியதாலும், கணபதியைப் பரம்பொருளாகக் கொண்டு காணபதியம் என்ற தனிச்சமயம் கிளைத்ததாலும், விநாயகர் வழிபாடு சிவ வழிபாட்டின் ஓர் அங்கம் என்பதாலும் பதி னோராம் திருமுறையில் விநாயகரைப்பற்றிய சிறு பிரபந்தங்கள் தொகுக்கப்பெற்றன. இருப்பினும், இவரைப் பற்றிய புராணம் முதலிய பெருநூல்கள் இதுவரை தோன்றவில்லை. விநாயகர் வழிபாட்டு வளர்ச்சியும், அவரைப்பற்றிய இலக்கிய வளர்ச்சியும் இணையாக உள்ளன.

**ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகள் :**

**பிற பிரபந்தங்கள், பாடல்கள் முதலியன.**

1. **கல்லாடம் :** கல்லாடனார் இயற்றியது கல்லாடம். இதில் விநாயகரை வழிபடுகின்ற அருமை யான காப்புச்செய்யுள் ஒன்று உள்ளது. இவரும், பதினோராம் திருமுறையில் திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற சிறுபிரபந்தத்தைப் பாடிய கல்லாடனாரும் ஒருவரே. இவரது காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று ஒரு சிலரும், ஒன்பதாம் நூற்றாண்டு என்று ஒரு சிலரும் கூறுகின்றனர். இவரும், கடைச்சங்கப்புலவரான கல்லாடரும் வெவ் வேறானவர்.

*2. விநாயகர் திரு அகவல் :* இதனை இயற்றியவர் நக்கீரதேவர். இந்நூல் 167 அடிகளைக் கொண்டது. இந்நூலில் விநாயகரது தோற்றப் பொலிவுகளும், புராண வரலாறுகளும், பெருமைகளும் பிறவும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. யோக சாத்திரக் கருத்துக்களும் அங்கங்கே பரவலாக விரவி வருகின்றன. அவ்வையார் பாடிய விநாயகர் அகவலுக்கு இந்நூலே முன்னோடி நூல் என்று கருதலாம்.

*3. விநாயகர் அகவல் :* அவ்வையார் அருளியது. விநாயகர் சதுர்த்தியன்று கோடிக்கணக்கான பக்தர்கள் பாராயணம் செய்கின்ற நூல் விநாயகர் அகவல். பக்தர்கள் யோக நெறிகளைப்படிகளாகக் கொண்டு தம்மைத்தாமே உயர்த்திக் கொள்கின்ற முறைகளும், விநாயகர் குருவடிவாகி வந்து பேரருள் சுரக்கும் திறன்களும் இந்நூலில் விரிவாகக் கூறப்பெற்றன. நூல் கடினமான பொருட்போக்குடையது; இருப்பினும் பாராயணத்திற்கு ஏற்றது.

தமிழகத்தில் விநாயகர் வழிபாடு உயர் நிலை யிலிருந்து உச்சநிலையில் மேம்படுவதற்கு அவ்வையார் காரணமாவார். இவர் அருளிய விநாயகர் அகவலும், 'பாலும் தெளிதேனும்'...., ''வாக்குண்டாம்....'' என்று தொடங்குகின்ற பாடல்களும் தமிழகமெங்கும் ஒலித்து விநாயகரின் புகழைப் பரப்புகின்றன.

## பதினோராம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரை

கி.பி. பதினோராம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய சிறு பிரபந்தங்கள் பலவற்றிலும், புராணங்கள் பலவற்றிலும், ஏனைய நூல்களிலும் விநாயகர் வணக்கமாக அமைந்த காப்புச் செய்யுட்கள் நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றன. இவை அனைத்தையும் ஒரு சேரத் தொகுத்தால் விநாயகரின் மகிமைகளைக் கூறுகின்ற ஓர் அருமையான தொகுப்பு நூல் கிடைக்கும்.

## பதினெட்டாம் நூற்றாண்டு :

*1. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் :* ஐம்பத்து மூன்று விருத்தங்களைக் கொண்ட இந் நூலைச்சிவஞான முனிவர் இயற்றினார்.

*2. விநாயகர் புராணம் :* கச்சியப்ப முனிவர் காஞ்சியில் பிறந்தவர்; பின்னர்த் தணிகையில் குடியேறியவர். சிவஞான முனிவரிடத்தில் தமிழும் வடமொழியும் பயின்றவர். இவர் தணிகைப் புராணம், திருவானைக்காப்புராணம், பேரூர்ப்புராணம் முதலிய பல புராணங்களை இயற்றினார். விநாயகர் புராணத்தை இயற்றியவரும் இவரே.

விநாயகர் புராணம், விநாயகரது புராண வரலாற்றையும், அவரது சிறப்புகளையும் அவரை வழிபடுகின்ற முறைகளையும், வழிபட்டார் பெறுகின்ற பேறுகளையும் விரிவாகக் கூறுகிறது.

முனிவர் விநாயகரைப் போற்றிச் 'சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ்' என்ற சிறு பிரபந்தத்தையும் இயற்றினார்.

*3. பறாளை விநாயகர் பள்ளு :* பறாளை என்பது யாழ்ப்பாணத்திலுள்ள திருத்தலம். இங்கு எழுந்தருளியுள்ள விநாயகரை வழிபட்டு, யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் இயற்றியது பறாளை விநாயகர் பள்ளு.

## பத்தொன்பதாம் நூற்றாண்டு

*1. கணபதி ஆயிரம் :* வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளியது ''கணபதி ஆயிரம்.''

சுவாமிகள் ஞாயிறுதோறும் ஞாயிற்றையும், திங்கள் தோறும் சிவனையும், செவ்வாய் தோறும் அம்பிகையையும், புதன் தோறும் திருமாலையும், வியாழன் தோறும் விநாயகரையும், வெள்ளிதோறும் முருகனையும், சனி தோறும் பல தெய்வங்களையும் பாட வேண்டும் என்ற முறை வைத்து ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் ஆயிரமாயிரம் பாடல்களாக மொத்தம் ஏழாயிரம் பாடல்களைப் பாடினார்.

இவ்வாறு வியாழன் தோறும் விநாயகரைப் பற்றிப் பாடபட்ட நூலே ''கணபதி ஆயிரம்''.

தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக அதிகமான - இலட்சத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடிய பெருமை சுவாமிகள் அவர்களுக்கே உரியது.

*2. திருவருட்பா :* முருகன், நடராசன் முதலிய பல தெய்வங்களை வழிபட்டுப் பாடிய வள்ளலார் விநாயகரைப் போற்றிப்பாடிய பாடல்கள் பல திருவருட்பாவில் உள்ளன.

## இருபதாம் நூற்றாண்டு

*1. விநாயகர் நான்மணி மாலை :*
இந்நூலைப் பாரதியார் இயற்றினார்.

* * *

# ஸ்ரீ நரஸிம்மர் மஹிமை

- மும்பை ராமகிருஷ்ணன்

அகங்காரமும் ஆணவமுமே தனக்கு எதிரியாக முடிவுக்கு ஏதுவாக ஆகிறது. சிவபக்த ராவணனின் ஆணவத்தை அழிக்க மஹாவிஷ்ணு மனிதராக ராம ராக அவதரித்தார். சிவபக்த சூரபத்மாதியரை வதைக்க சிவனே கந்தனாக உருவெடுக்க வேண்டிய்தாகிறது. இரண்ய கசிபு பிரமனை நோக்கி மிகப்பெருந்தவம் இருந்தான். தனக்கு சாகாவரம் வேண்டும் என, பிரமன் சந்தோஷப்பட்டு வரம் கொடுக்க இசைந்தான். ஆனால் சாகாத நிலை கிடையாது என்றான். மனிதனாலோ, மிருகத்தாலோ, தேவராலோ, பகலிலோ, இரவிலோ, ஆகாசத்திலோ, பூமியிலோ, உயிருள்ள அல்ல உயி ரற்றவைகளினாலோ ஆயுதங்களினாலோ மரணம் கூடாது என்றான். பிரமனும் இசைந்தான். வரம் பெற்ற மதங்கொண்ட இரண்ய கசிபு, பூஜை, யாகம், மந்த்ரம் யாவும் 'ஹிரண்யகசிபுவே நம' சிவனையோ, அரியையோ வழிபடக் கூடாது என்றான். இதற்கிடை யில் அவன் மனைவி கயாது கர்ப்பமாகியிருந்தாள். நாரதர் அப்போது வந்து அவளுக்கு அவள் தூங்கும் சமயம் அதாவது கர்ப்பத்தில் வளரும் குழந்தைக்கு, மஹாவிஷ்ணுவின் அட்டாட்சரம் போதித்து சென்றார். பிறந்த குழந்தையின் பெயர் ப்ரஹ்லாதன். தகப்பன் குழந்தையைக் கொஞ்சினால் குழந்தை அரி, நாராயணா என்று சொன்னது. வெகுண்டு ஆசிரியர்களிடம் தன்னைப்பற்றி கூறும்படி ஏற்படுத்தினான். ப்ரஹ்லாதன் மற்ற மாணாக்கர்களையும் நாராயண பஜனை செய்ய செய்து விட்டான். இதன் மூலம் மஹாகோபங்கொண்ட இரண்யகசிபு, பச்சிளம் பாலகனை மத யானையால் மிதிக்கச் செய்தான். நாராயணன் நாமம் கேட்ட யானை கஜேந்திரனின் ஞாபகம் வர வலம் வந்து மண்டி யிட்டது. விஷங் கொண்ட பாம்பால் கடிக்கச் செய் தான். குழந்தையின் நாராயண நாமம் கேட்ட பாம்பு மகுடிக்கு மயங்கி ஆடுவது போல் படமெடுத்து ஆடி வலம் வந்து சென்றுவிட்டது. மதம் கொண்ட அரசன் மலைமீது உருளச் செய்தான். மலை அதற்கு நாராயண நாமம் சொல்ல பஞ்சணை ஆகியது. ஆத்திரங் கொண்ட அரசன் தனது மனைவி கயாதுவைக் கூப் பிட்டு கொடிய விஷத்தை ஊட்ட செய்தான். அன்னை நெஞ்சு நஞ்சைக் குழந்தைக்கு தர இயலுமா? அவள் கதறினாள். ப்ரஹ்லாதன் கூறுவான்! ''அம்மா கவலைப்படாதே''! என்னை எப்போதும் காப்பாற்றிய நாராயணன் இப்போதும் என்னைக் காப்பாற்று வான் என்று கேட்டு வாங்கி நஞ்சை உண்டான். ராணி அன்னை மீராவுக்கு நஞ்சு அம்ருதமானது போல் அது அம்ருதமானது.

பிரகலாதன் சகோதரி ஹோனிகா. பிரகலாதனை ஹோனிகா மடிமீது இருத்தி தீ மூட்டினான். ப்ரகலாதன் நாராயண நாமம் சொல்ல, ஹோனிகா தீயில் எரிந்து போனாள். ப்ரஹலா தனை ஒன்றும் செய்யமுடிய வில்லை. ஆண்டவனது நாம பலம் மஹ்மை அவ்வாறு. இதனை அடுத்தே வட நாட்டில் பௌர்ணமி தினம் 'ஹோலி' பண்டிகை என்று எரித்து கொண்டாடுவர். தமிழ்நாட்டிலும் வடநாட்ட வர்கள் ஹோலிகாதகனம் என கொண்டாடுவது உண்டு. இதே போன்று பலபல நாயன்மார்கள் சரிதங்களிலும் சிவன்காப்பதை காணலாம். ஆத்திரமும் கோபமும் பயமும் இரண்ய கசிபுக்கு அதிகமாகியது.

ஆகையால் தனது சிம்மாசனத்திலிருந்தபோது, பயங்கர கர்ஜனையுடன் மகனை கூப்பிட்டு ''யாரடா அவன் ஹரி! எங்கே அந்த நாராயணன்! என்னைக் கண்டால் பயமோ! என் எதிரே வரமாட்டானோ'' என்றார்! குழந்தை சாந்த மான குரலில், ஹரி எங்கும் உள் ளானே! உலகனைத்திலும் அணுவிலும் உள்ளானே! அவனை தாங்களும் பயபக்தியோடு துதி செய்தால் அருள் மழையை பொழிவானே! என்னை எல்லா வித ஆபத்துகளிலிமிருந்து காப்பாற்றியவன் ஹரி தானே! தாங்களும் கோபத்தை விட்டு சாந்தமனதுடன் அவனை துதிசெய்யுங்களேன் என்றார்! இந்த வார்த் தைகள் இரண்யகசிபுவுக்கு புண்ணில் பட்ட சுட்ட எண்ணை போலாயிற்று. மிகுந்த கர்ஜனையோடு ''டேய்! அந்த ஹரி இந்த தூணில் இருக்கானாடா! எனக்குத் தெரிய வில்லையே!'' என்றார். ப்ரஹலாதன் எனக்கு தெரிகிறானே என்றான். ''எங்கேடா பொய் சொல்கிறாயே'' என்று தன்னுடைய கதையால் ஓங்கி தூணை அடித்தான். அது தான் தாமதம். பெரிய இடிமுழக்கம் மின்னலும் போல், தூணை உடைத்துக் கொண்டு ஒரு உருவம் வந்தது. இங்கு முகம்; மனித உடல்; கைகளில் வெகுகூர்மையான நகங்கள். சிங்கம் கர்ஜித்தது. இரண்ய கசிபு ஆச்சர்யமுற்றான். கதி கலங்கினான். அந்த அரை நரசிங்கம், இரண்ய கசிபுவை சிம்மாசனத் திலிருந்து கீழே தள்ளி, தரதரவென்று இழுத்து அரண் மனை வாயில் கதவு படியில் உட்கார்ந்தது. தனது மடியில் மல்லாக்க அரசனை கிடத்தியது. தனது கோர நகத்தால் அவனது வயிற்றை குடலை கிழித்து நரம்பு மாம்சங்களை மாலையாகப் போட்டுக் கொண்டது.

இரண்ய கசிபு மாண்டான். இது பிரமனின் வரத்திற்கு உட்பட்டது. பார்ப்போமா! மஹாவிஷ்ணு அவதாரம் - தேவனல்ல, மனிதனல்ல, மிருகமல்ல, நரசிங்க - அரைய மனித மிருகரூபம்.

நேரம் - இரவு அல்ல; பகல் அல்ல; சாய சந்தி வேளை.

இடம் - ஆகாயம் அல்ல; பூமி அல்ல; நரஸிங்கரின் மடி; உள்ளே அல்ல; வெளியே அல்ல; வாயில்படி.

ஆயுதம் - நகம் - நகம் விரலில் இருந்தால் வளரும்; உயிருண்டு. - கிள்ளி போட்டால் - அதற்கு உயிர் இல்லை.

விநோத வரம் : வினோத வரத்திற்கு உட்பட்ட தீர்ப்பு அல்லவா - அதுதான் கடவுள் செயல் என்பது. நரஸிம்ஹ ஜயந்தியானது, வைசாக சுத்த சதுர்தஸி - ஸ்வாதி நக்ஷதிரம்.

இந்த நன்நாளில் ஸ்ரீ நரஸிம்ஹரை வழிபட்டு வரம் பெறுவோமாக. ஆழ்வார்கள் யாவரும் நரஸிம்ம அவதாரத்தை பாடி உள்ளனர். நரஸிம்ஹருக்கு தமிழ் நாட்டில் ஒரு சில, பிரத்யேக கோயில்களோ உள்ளன. நரஸிம்ஹரை ஆந்திர, கன்னடியர்கள் அதிகமாக வணங்குவார்கள். ஒரு சில கோயில்களை பார்ப்போமா?

சென்னையிலிருந்து 50 கி.மீ. ல் சிங்கபெருமாள் கோயில் உள்ளது. மலையைக் குடைந்த நிற்கின்ற கோலத்தில் உள்ள பெருமாள். பெருமாளை வலம் வர மலையையே சுற்றி வர வேண்டும்.

சோளிங்கர் அல்லது கடிகாசலம். அரக்கோணத்திலிருந்து 20 கி.மீ. உயர்ந்த மலையில் லக்ஷ்மியை மடியிலமர்த்தி யோக நரஸிம்ஹராக அருள்பாலிக்கிறார். பில்லிசூன்யம் பிசாசு பிடித்தவர்கள் வணங்கும் தலம். நரசிம்மர் அவதாரமான கதையைப் பார்த்தோமா; அந்த கோப உருவை தேவர்களுள் லக்ஷ்மியும் கண்டு பயந்தாராம். ப்ரஹ்லாதன் வேண்டுதலுக்கு இரங்கி ஸாந்தமடைந்தார். பின்பு மடியில் லக்ஷ்மியை மடியில் அமர்த்தி அனைவருக்கும் அருள்புரிந்தாராம். சோளிங்கரில் மற்றொரு சிறிய மலையில் யோக ஆஞ்சனேயரையும் காணலாம்.

நாமக்கல் திருச்சி அருகே உள்ளது. மிகப் பெரிய ஆஞ்சனேயர், நாமக்கல் கவிஞரை ஞாபகப் படுத்தும். இந்த ஆஞ்சனேயர் மழையிலும் வெயிலிலும் கூரையற்று உள்ளார். கூரைவேய முனைந்தாலும் முடிவதில்லை. காரணம் அவர் எதிரே இருக்கு நாமகிரி நாமமலையே ஒரு சாளிக்ராமமாம். விஷ்ணுவின் மறுரூபம் சாளக்கிராமம். பெருமாள் கூரையில்லாமலிருந்தால் பெருமாள்தாஸன் ஹனுமன் கூரை வேய ஆசைப்படுவாரா?.

நாமக்கல்லில் மலையை குடைந்த ஒரு கோயில் உண்டு. இங்குள்ள நரஸிம்மரைப் பார்த்தால் அவரது கோர ரூபம் புரியும். கைவிரல் நகத்தைப் பார்த்தால் 'சிவப்பாக இருக்கும்' - பூச்சு அல்ல! அங்குள்ள அன்னைபெயர் பெரியநாயகி சாந்த மூர்த்தி.

ஸ்ரீரங்கம் வருவோம். பெரிய கோயில் நரஸிம்ஹ மேடை ஒன்று உள்ளது. பெரிய நரஸிம்ம படமும் உள்ளது. கம்பர் கூத்தனூர் ஸரஸ்வதி அருளால் ராமாயணம் எழுதினார். இன்றுபோல் அல்ல. அதனை அரங்கேற்றம் செய்ய மிகுந்த கஷ்டம். காரணம் சில சம்பவங்கள் வால்மீகி ராமாயணத்திற்கு மாறுபட்டு இருந்தன. 'கடவுள் உணர்வு' கூடாதா என்ன? ஒருகாரணம். விபீஷணன் ராவணனுக்கு போதித்தார் - ராமனைப் பற்றி மனிதன் என எண்ணாதே! ப்ரஹ்லாதனைக் காக்க நரஸிம்ஹரய் வந்த மஹாவிஷ்ணுவே ராமன் என்றார். இந்த சம்பவத்தை 170 பாடல்களில் விவரித்தார். கவிஞர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆனால் மேடையில் இருந்த நரஸிம்ஹர் கர்ஜனைக்குரல் கொடுத்தாராம். கவிஞர்கள் புலவர்கள் மக்கள் ஆச்சர்யப்பட்டனர்.

அஹோபிலம் என்ற ஆந்திரசேத்ரம் 10 நரஸிம்மர் கோயில்களைக் கொண்ட மாது என்ற நரஸிம்மனே அருள்புரிந்து, விக்ரஹம் கொடுத்து, அஹோபில மடம் என ஸ்தாபிக்க செய்தது, அதிலுள்ள ஒரு பெரியவர் மூலம், தனது தள்ளாத வயதிலும் பெரிய கார்யமாக, மஹாமஹா ராஜாக்கள் செய்ய முடியாத, ஸ்ரீரங்க பெரியமுன் கோபுரத்தை கட்டிட ஆண்டு கொண்டார் என்றால் நரஸிம்ஹர் பெருமை கூற இயலுமா!

சுதர்ஸன சக்ரத்தின் மறுபுரம் நரசிம்மர் இருக்கும். புராதன விஷ்ணு கோயில்களில் நவ கிரஹங்கள் இருக்காது. கோள்களின் தொல்லைகளை சக்ரத்தாழ்வாரும், நரஸிம்மருமே காப்பாற்றுவார்கள் என்பர். நரசிம்மரை நாளும் வணங்கி நலம் பெறுவோம் ஆக!

* * *

# ஸ்ரீமன் நாதமுனிகள்

- திருமதி இந்திரா ஆராஅமுதன், திருவரங்கம்

பிரம்மா படைத்த நான்கு வேதங்களையும் மது, கைடபன் என்ற இரு அசுரர்கள் அபகரித்துச் சென்று பாதாள லோகத்தில் ஒரு பெண் குதிரை வடிவமாக ஆக்கி ஒளித்து வைத்தனர். பகவான் ஹயக்ரீவனாக திருவடிவம் கொண்டு அசுரர்களை வென்று வேதங்களை மீட்டு வந்து பிரம்மாவிடம் தந்தார்.

தமிழ் வேதங்கள் மறைந்து விட்டனவே என்று பொதிகமலையில் வாழ்ந்த கும்பசம்பவரும், ஆங்கீரஸாதி ரிஷிகளும் கவலை கொண்டனர். திருவேங்கட நாதனைப் பிராத்தித்தனர். செவி மடுத்த வேங்கடத்தான், கங்கை கொண்ட சோழபுரம் என்று அழைக்கப்படும் வீரநாராயணபுரத்தில் ஈஸ்வரபட்டர் என்று ஒருவர் இருக்கிறார். அவர் அங்குள்ள மன்னனார் சன்னிதியில் கைங்கர்யம் செய்து வருகிறார். அவருக்கு நாதமுனிகள் என்ற பிள்ளையாக, சேனை முதலியாரின் முக்கிய படைத்தலைவரான கஜானனர் (யானை முகம் உடையவர்) என்கிற நித்ய சூரியின் அம்சமாக தோன்றுவார் என்றும், அவர் மூலம் நீங்கள் இழந்த திராவிட வேதங்களை மீண்டும் பெறுவீர்கள் என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

அதன்படி, கி.பி. 823 சோபக்ருது வருடம், ஆனி மாதம் பௌர்ணமி திதி அனுஷநக்ஷத்திரத்தில் புதன் கிழமையன்று குழந்தைபிறந்தது. இந்த நற்செய்தியை ஈஸ்வரபட்டர் கும்பசம்பவருக்குத் தெரிவிக்க அவர் புறப்பட்டு வந்தார். திருவேங்கட நாதன் திருவருளால் பிறந்த அக்குழந்தைக்கு நாதமுனிகள் என்று பெயர் சூட்டினார். (சிலர் ரங்கனாதன் என்று இருந்ததை சுருக்கி நாதமுனிகள் ஆனார் என்றும் சொல்வர்). இவர் சகல வேத சாஸ்திரங்களையும் கற்றறிந்து அஷ்டமா சித்திகம், யோகக்கலை ஆகியவற்றிலும் வல்லுனராகி மன்னனாருக்கு கைங்கரியம் செய்து வந்தார்.

இவ்வாறு இருக்கும் போது வடதேசயாத்திரை செய்ய சென்று யமுனை தீரத்தில் உள்ள கோவர்த்தன புரத்தில் உள்ள யமுனைத் துறைவனை சேவித்தபடி தங்கியிருந்தார். (இதன் காரணமாகத்தான் இவருக்கு பேரனாகப் பிறக்கப்போகும் ஆளவந்தாருக்கு யமுனைத் துறைவன் என்ற பெயர் சூட்டச் சொன்னார்). அப்போது வீரநாராயணபுரத்து மன்னனார் இவரது கனவில் தோன்றி தம்மை சேவிக்க வருமாறு கூறினார். இவரும் யமுனைத் துறைவரிடம் விண்ணப்பிக்க அவரும் அர்ச்சகர் மூலமாக தீர்த்தப்ரசாதம் தந்து விடை கொடுத்து அனுப்பினார். வழியில் உள்ள எல்லா முக்கிய தலங்களையும் சேவித்து விட்டு, கடைசியில் இங்கே வந்து தங்கினார். நந்தவனம் அமைத்தார். திருமாலை சாத்துபடி, அமுதுபடி, திருவிளக்கு எடுப்பது போன்ற கைங்கர்யங்களைச் செய்து கொண்டு சாஸ்திர ப்ரவர்த்தனங்களையும் செய்தபடி இருந்தார்.

மேல் நாட்டிலிருந்து (மைசூர் திருநாராயண புரம்) வந்த சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் மன்னனார் சன்னிதியில் ''ஆரா அமுதே'' என்று தொடங்கும் நம்மாழ்வாரின் பாசுரத்தை சேவித்தனர். ''ஆயிரத்துள் இப்பத்து'' என்று முடியும் வார்த்தைகளைக் கேட்ட நாதமுனிகள், இந்த ஆயிரமும் உங்களுக்குப் பாட வருமா, அல்லது உங்கள் ஊரில் ஸ்ரீகோசம் இருக்கிறதா யாரிடமாவது?'' என்று அவர்களிடம் வினவினார். அதற்கு, ''ஸ்ரீகோசமும் யாரிடமும் இல்லை, இந்த பத்து பாசுங்களைத் தவிர வேறு யாருக்கும் ஒன்றும் தெரியாது'' என்று பதிலளித்தனர். எப்படியாவது இப்ப்ரபந்தத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்று அதே சிந்தனையில் இருந்தவர், குருகூர் சென்று கேட்கலாம் என்று மன்னனாரிடம் விடை பெற்றுச் சென்றார்.

ஆழ்வார்திருநகரி வந்தபின், பொரிந்து நின்ற பிரானையும், நம்மாழ்வாரையும் சேவித்தார். பின் மதுரகவிகளின் சிஷ்ய பரம்பரையில் வந்த பராங்குச தாஸர் என்பவரிடம் சென்று வணங்கி தாம் வந்த காரணத்தைச்சொன்னார்.

அதற்கு அவர், திருவாய்மொழியும் மற்றவையும் மறைந்து வெகுகாலம் ஆகிவிட்டது. ஆனால் எங்கள் குருவான மதுரகவிகளின் ''கண்ணி நுண்சிறுத் தாம்பு'' என்ற பிரபந்தத்தை பக்தியுடன் பன்னீராயிரம் தடவை ஜபித்தால் ஆழ்வார் பிரசன்னமாவார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம் என்றார். நாதமுனிகள் அவரிடமிருந்து உபதேசம் பெற்றார். ஏகாக்ர சிந்தையுடன் நியமத்துடன் பன்னீராயிரம் தடவை ஜபித்தார். நம்மாழ்வார் பிரசன்னமாகி ''நம்மைக் குறித்து தவம் இயற்றக் காரணம் என்ன'' என்று அசரீரி வாணியாக கேட்டார்.



நாதமுனிகள் அவரை வணங்கி, மறைந்த திருவாய்மொழி, மற்றும் மற்ற பிரபந்தங்களைத் தமக்கு அருள வேண்டுமாய் விண்ணப்பித்தார். அவரும் மகிழ்ந்து இவருக்கு ஞானக் கண்ணைக் கொடுத்துவிட்டு, ''தமக்கு பட்டுத்திரை போட்டு விட்டு, தாம் சொல்வதை பட்டோலை செய்யும்படி'' கூறியதை நாதமுனிகள் அவ்வாறே செய்ய நாம் அந்த பிரபந்தங்களைத் திரும்பப் பெறும் பாக்கியத்தை அடைந்தோம்.

திருவாய்மொழியின் ''பொலிக, பொலிக'' (5-2-1) என்ற பாசுரத்தைப் பட்டோலை கொண்டபின், ஆர்வத்தால் இவ்வாறு தோன்றப்போகும் புருஷர் யார் என்று நாதமுனிகள் கேட்க, அவர் பெயர் இராமானுஜன் என்று நம்மாழ்வார் கூறினார். உடனே மதுரகவிகளின் பாசுரமான ''பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும், செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான்'' என்பதை இயல் இசையுடன் பாடி அந்த மஹானுபாவரின் உருவத்தைக் காட்டுமாறு வேண்டினார். நாதமுனிகள், 12 திருமண்காப்புடன், காஷாய, திரிதண்டம் தாங்கி தேஜயான முகத்தையுடைய ராமானுஜரின் உருவத்தை நம்மாழ்வார் காட்ட நாதமுனி கண்டுகளித்தார். பின் அவருடைய விக்ரகத்தையும் வகுத்துத் தர வேண்டினார். இசைந்த நம்மாழ்வார் அந்த ஊரில் உள்ள கடவ சில்ப வம்சத்தினரின் கனவில் ஆக்ஞையிட்டார். அந்த சிற்பியும் ஆழ்வாருக்கு எதிரில் வந்தமர்ந்து ராமானுஜரின் லக்ஷணங்களைக் கனவில் கண்டபடி வடித்து தந்தார். பின் ஆழ்வார் அந்த விக்ரஹத்திற்கு சக்தி ஊட்டிவிட்டு, நாதமுனிகளிடம் கொடுத்து மறைந்தார். அத்துடன் உமது குலத்தில் ஆளவந்தார் என்பவர் தோன்றப் போகிறார் என்பதையும், அவர் மூலம் ராமானுஜர் வழி வந்து மதம் பிரபலமாகும் (ராமானுஜர் விசிஷ்டாத்வைத மதத்தை ஸ்தாபிக்கப் போவதை) என்பதையும் அருளினார். சிலகாலம் குருகூரில் இருந்துவிட்டு நாதமுனிகள் வீரநாராயணபுரம் திரும்பினார்.

மன்னனார் இந்த திவ்ய பிரபந்தத்தைக் கேட்டு மகிழ்ந்து தன் நிஜ உருவை நாதமுனிகளுக்கு ஸ்வப்னத்தில் காட்டியதுடன், இவைகளுக்கு இயல், இசை அமைத்து பிரபலமாக்கும் படி பணித்தார். தன் மருமகன்களான கீழை அகத்தானுக்கும், மேலை அகத்தானுக்கும், திருக்கண்ணமங்கை ஆண்டானுக்கும் நாதமுனிகள் கற்றுக்கொடுத்தார்.

மனுஷ்ய கானம், தேவகானம் என்று இருவகை உண்டு. சோழ ராஜ சபையில் தேவகானம் பாடிய தாசிக்கு மன்னன் வெகுமதி ஒன்றும் தராததால் அவள் மன்னனார் முன்பு வந்து வருத்தத்துடன் தேவகானத்தைப் பாட அதை மிகவும் ரசித்தார் நாதமுனிகள். உடனே அவள் மன்னனிடம் சென்று தேவகானத்தைப் பற்றி தெரிந்த ஒருவர் இருக்கிறார் மன்னனார் சன்னிதியில் என்று சொன்னதைக் கேட்டு, அரசனும் நாதமுனிகளை அரச சபைக்கு வரவழைத்தான்.

அந்த தாசியிடம் தேவகானத்தை இசைக்கும் படி கூறிவிட்டு ஒரு தாளத்தை எடுத்து தூணின் மேல் வைத்தார் நாத முனிகள். அவள் பாட்டை நிறுத்திய வுடன் தூண் இறுகியதால் தாளத்தை எடுக்க முடிய வில்லை. மறுபடி அவள் பாட ஆரம்பித்தவுடன் உருக ஆரம்பித்தது. அந்த சமயத்தில் தாளத்தை வெளியே எடுத்தார் நாதமுனிகள். கல்லையும் உருகவைக்கும் தன்மை கொண்ட தேவகானத்தின் மகிமையை அப் பொழுதுதான் அரசனும் புரிந்துகொண்டான். மேலும் நூற்றுக் கணக்கில் தாளங்களை ஒன்று சேர சப்திக்கச் செய்து ஒவ்வொன்றின் எடையையும் (சுமார் 400 தாளங்கள்) துல்லியமாகக் கூறினார் நாதமுனிகள். சோதித்து பார்த்து ஆச்சர்யம் அடைந்த அரசன் இவருடைய பக்தனாகி நிறைய வெகு மதிகளைத் தந்தான். இவர் பொருள் பற்றற்றவர் ஆதலால் மறுத்து விட்டு தேவகானம் பாடிய தாசிக்கு கொடுக்குமாறு கூறிவிட்டு தன் இருப்பிடத்திற்கு வந்து யோகத்தில் அமர்ந்தார்.

அரசனும் இவரைப் பார்க்க அடிக்கடி வரும் போதெல்லாம் இவர் நிஷ்டையில் இருப்பார்! அவருடைய நிஷ்டையைக் கலைக்க மனம் வராமல் திரும்பும்போது, திடுமென்று யோகம் கலைந்த நாத முனிகள் அரசனையும் பரிவாரங்களையும் திரும்பிச் செல்வதைப் பார்த்தவுடன் பெருமானும், பிராட்டியும் செல்கிறார்கள் என்று அவர்கள் பின்னேயே ஓடுவார். அவர்கள் திருமால் இல்லை, அரசனும் அரசியும் தான் என்று சொல்லி இவரை திரும்ப அழைத்து வருவார் கள் இவருடைய முக்கிய சிஷ்யர்களான குருகைக் காவலப்பனும், புண்டரீகாக்ஷரும்.

குருகைக் காவலப்பனுக்கு யோகரகசியத்தை யும், உய்யக்கொண்டார் என்கிற புண்டரீகாக்ஷருக்குத் திவ்யப் பிரபந்தங்களையும் கற்பித்தார். பின்னாளில் புண்டரீகாக்ஷரின் சிஷ்யரான மணக்கால் நம்பி மூலம் ஆளவந்தாரிடம் இந்த அரிய கலைகள் சேர்ப்பிக்கப் பட்டன.

தன் பிள்ளையான ஈஸ்வர முனிகள் அழைத்து ''உனக்கு ஒரு பிள்ளை பிறப்பான். அவனுக்கு யமுனைத் துறைவன் என்று நாமகரணம் செய்'' என்றார். பின் உய்யக் கொண்டாரிடம் நம்மாழ்வார் கொடுத்த ஸ்ரீராமானுஜ விக்ரகத்தைக் கொடுத்துவிட்டு பிறக்கப் போகும் தன் பேரனான யமுனைத் துறைவனிடம் சேர்ப்பிக்கச் சொல்லி ஒப்படைத்துவிட்டு யோகத்தில் ஆழ்ந்தார்.

வாசலில் இரு வில்லிகள், ஒரு பெண், ஒரு குரங்குடன் வந்தவர்கள் ''நாதமுனி எங்கே'' என்று கேட்கிறார்கள் என்று நாதமுனிகளின் பெண் சொல் வதைக் கேட்டு யோகம் கலைந்தார். வந்தவர்கள் ராம, லக்ஷ்மண, சீதை, அனுமான் தான் என்று புரிந்து கொண்டு ''எங்கே அவர்கள்'' என்று கேட்டபடி அவர்கள் பின்னாலேயே இவர் துரத்த, அவர்களும் தன் பாட்டுக்கு கங்கை கொண்ட சோழபுரம் கீழ் வாசல் வரை சென்றபின் மறைந்ததைப் பார்த்து துக்கம் மேலிட்டு யதேச்சையாக ஒரு கல்தடுக்கிய காரணத் தினால் கீழே விழுந்து திருநாட்டுக்கு எழுந்தருளி விட்டார். இவருடைய திருமேனி ''சொர்க்கப்பள்ளம்'' என்கிற இடத்தில் திருப்பள்ளிப் படுத்தப்பட்டிருக் கிறது.

ஆக நாதமுனிகள் அவதாரம் செய்திருக்கா விட்டால் நாலாயிரம் என்கிற அருமையான பொக் கிஷத்தை நாம் அனுபவித்து ரசிக்கும் வாய்ப்பே கிட்டியிருக்காது என்பது திண்ணம்.

அப்படிப்பட்ட மஹா புருஷரின் சன்னதி ஸ்ரீரங்கம் கோயிலில் நான்முகன் தெற்கு கோபுர வாசலின் வழியாக உள்ளே நுழைந்தவுடன் இடது பக்கத்தில் இருக்கிறது. ஸ்ரீரங்கத்தில் வேறு ஒரு இடத் திலும் அவருக்கு சன்னிதி கிடையாது காட்டுமன்னார் கோயில் தவிர.

ஒரு சமயம் கம்பர் தன் ராமாயணத்தை அரங்கேற்றம் செய்வதற்கு சிதம்பரம் சென்றபோது அவருக்கு அங்கே அனுமதி மறுக்கப்பட்டது. அப் போது நாதமுனிகள் தான் அவருக்கு உறுதுணை யாக நின்று அவருடைய அரங்கேற்றத்தை ஸ்ரீரங்கத் தில் நடத்துவதற்கு உதவினார். பெரிய பிராட்டி சன்னிதியின் முன்னால் இருக்கும் நாலுகால் மண்ட பம் தான் கம்பர் மண்டபம் என்று அழைக்கப்படு கிறது என்பதும். அதை அங்கீகரித்த மேட்டு நரசிம்ம ரின் சன்னதியும் பக்கத்தில் இருப்பதையும் அவர் சிரித்த முகத்துடன் இருப்பதையும் இன்றைக்கும் நாம் காணலாம்.

ராமாயணம் அரங்கேற்றம் செய்ய முக்கிய காரணகர்த்தாவாக இருந்த நாதமுனிகளுக்கு கம்பர் எவ்வாறு நன்றி செலுத்தினார் தெரியுமா? நாதமுனி கள் சன்னிதிக்கு எதிரில் உள்ள நாலுகால் மண்டபத் தில் தான் பெருமாள் வீதி உலா முடிந்து திரும்பு போது திருவந்திக் காப்பு நடைபெறும் இடம் என்பது எல்லாருக்கும் தெரியும். அந்த நாலுக்கால் மண்டபத்து தூண்களில் ஒரு தூணில் கூப்பிய கரங்களுடன் கம்பன் நிற்பதையும் நாதமுனிகளுக்கு அஞ்சலி செய்தபடி இருப்பதாக வடித்த சிற்பத்தையும் நாம் இன்றைக்கும் காண முடியும். தெரியாதவர்களெல்லாம் இனி தெரிந்து கொண்டு அவரை வழிபட்டு உய்வடைய வேண்டும்.

இத்தகைய மகாபுருஷரின் திருநட்சத்திரம் ஆனி அனுஷம் ஆகும்.

***

# இறைவனை அடைதல் சுலபம்

## - மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மையார்

சிவனும் சக்தியுமான நம் அப்பாவும் அம்மாவும் தன் குழந்தைகள் தன்னிடமே வந்து சேரணும் என்று மிக்க ஆவலாய் உள்ளனர். அப்படி தெய்வீகத் தாய் தந்தையரை அடைய தனியாக யாரும் சாதனை செய்ய வேண்டிய அவசியமே இல்லை

1. கூடிய மட்டும் ஜீவஹிம்சை செய்யக்கூடாது.
2. யார் மனதையும் புண்படுத்தாமல் இருப்பதே பெரிய சிறந்த தர்மம் ஆகும்.
3. கடமையைக் கருத்துடன் செய்திடல் வேண்டும்.
4. தன்னைப் போலே மற்றவர்களையும் நினைக்கும் நல்ல குணம் வேண்டும்.
5. எப்பவும் நம்மை படைத்தவனை, தாய் தந்தையரை மறக்காமல் அவர் புகழ் நாமம் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்.

### 1. ஜீவ ஹிம்சை செய்யக்கூடாது

ஜீவ ஹிம்சைகூடாது என்றால் நாம் குளிக்கவோ பல் தேய்க்கவோ கூடாது; வியாதிக்கு மருந்து கூட சாப்பிடக் கூடாது. இதெல்லாம் முடியுமா? அதனால் தான் கூடிய மட்டும் ஜீவஹிம்சை கூடாது என்றேன். ஜீவ ஹிம்சை கூடாது என்றால் மாமிசம் சாப்பிடக் கூடாது. கத்தக்கத்த உயிர் துடிக்கத்துடிக்க ஒரு உயிரைக் கொன்று சாப்பிடக் கூடாது. காய்கறிகள், இலைகள், பழங்கள், தானியங்கள் இவை கள் எப்படியும் நாம் பறிக்காவிட்டாலும், எடுக்கா விட்டாலும் கீழே உதிர்ந்துவிடும். அதனால் அவை களைச் சாப்பிட்டால் தப்பில்லை. மேலும் நகத்தை வெட்டினால் வளர்வது போல், வெட்டிய பின், பறித்த பின், செடி மேலும் மேலும் வளரும். குறைவதில்லை. வேருடன் பிடுங்கினாலும் உயிரும் போவதில்லை. அப்படியே உயிர் போவது போல் வேருடன் பிடுங்கினாலும், அவை துடித்து சப்தமிட்டு அழுவதில்லை. உயிர் துடிக்கத் துடிக்க, அதைக் கொன்று சாப்பிடுவது தவறு. நமக்கு துன்பம் தரக்கூடிய ஜீவன்களைக் கொன்றால் தப்பாகாது. அப்படிக் கொல்லும்போதே - அடிக்கும் போதோ இறைவா! இவை துன்புறுத்துகின்றதே! எல்லோரும் பயப்படுகின்றோமே! அதனால் தான் அதை நான் துன்புறுத்துகிறேன். அடிக்கிறேன். கொல்லுகிறேன் இறைவா! என்னை மன்னித்து விடு! இறந்த அந்த ஜீவாத்மா நல்ல பிறவியாக பிறக்கணும் என்று இறைவனை பிரார்த்தனை செய்து கொண்டே அவைகளை அடிக்கணும் கொல்லணும். இறைவனை வேண்டி வருத்தப்பட்டு செய்வதால் தப்பு ஆகாது.

### 2. யார் மனதையும் புண்படுத்தாமை

யார் மனதையும் புண்படுத்தாமல் இருப்பதிலே பஞ்ச பூதங்களின் இயக்கங்கள் அடங்கி விடுகின்றன. யாரையும் வெறுப்பாக பார்த்தாலும், வெறுப்பாக பேசினாலும், வேண்டாதப் பேச்சுக்களை கேட்டாலும், வேண்டாத விஷயங்களை நுகர்ந்தாலும், வேண்டாதவற்றை துன்பம் தரக் கூடியவற்றை செய்தாலும் நிச்சயமாக மனது புண்படும். பஞ்ச இந்திரியங்களாலும் நல்லதையே பார்த்து, நல்லதையே பேசி, நல்லதையே கேட்டு, நல்ல விஷயங்களையெல்லாம் நுகர்ந்து உணர்ந்து, நல்ல காரியங்களையே செய்கின்ற போது, எல்லோரது மனதும் வாழ்த்தும். எல்லோரிடமும் ஜீவாத்மாவாக உள்ள சக்தி வாழ்த்தும் போது, எல்லா வாழ்த்துகளுமாக சேர்ந்து, பெரிய சக்தியின் வாழ்த்துக்கள் கிடைக்கும். அப்படி எல்லா ஆத்மாக்களும் வாழ்த்தும்போது நாம் தெய்வீகமாக உயர்கின்றோம். மனிதன் தெய்வம் ஆகின்றான்.

### 3. தன்னைப் போல் பிறரை நினைக்கும் தன்மை

தன்னைப் போல் பிறரை நினைக்கும் தன்மையில், பிறர் மனதைப் புண்படுத்தாமல் இருக்கும் நல்ல குணங்கள் வந்து விடும். நமக்கும் நல்லதை செய்தால் தானே நமக்கு ரொம்பப் பிடிக்கும். அதே போல் நாமும் நல்ல உதவிகளை மற்றவர்களுக்கும் செய்து வருவது தான், தன்னைப் போலவே மற்றவர்களை நினைக்கும் நல்ல குணமாகும்.

மற்றவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு, அவர்கள் சிரித்தால் சிரித்து, அழுதால் அழுது, துக்கப்பட்டால் துக்கப்பட்டு, கூடிய மட்டும் உதவி செய்வதே தன்னைப் போல் பிறரை நினைக்கும் தன்மையாகும். நம்மிடம் எப்படி எப்படி பிறர் நடந்தால் நமக்கு தன்மையாகும். நம்மிடம் எப்படி எப்படி நடந்தால் நமக்கு மிகவும் சந்தோஷமாக இருக்குமோ அப்படியெல்லாம் நாம் மற்றவர்களிடம் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஒருவர் சந்தோஷப்பட்டால் அவரது நல்வாழ்வு கண்டு சந்தோஷப்பட வேண்டும்.

ஒருவர் கஷ்டப்பட்டால் அதை பார்த்து இரக்கப்பட்டு தனக்கு வந்தது போல் வருத்தப்பட வேண்டும். முடிந் தால், பேச்சிலோ, பொருளிலோ, சரீரத்திலோ உதவி செய்தல் வேண்டும். தினமும் ஒன்று அல்லது இரண்டு உதவிகள் அல்லது தர்மம் செய்து வந்தால், அது நாளுக்கு நாள் வளர்ந்து, சிறு துளி பெருவெள்ளம் ஆவது போல், சிறு தர்மங்கள் சேர்ந்து பெரிய தர்மம் ஆகிவிடும்.

### 4. படைத்தவன் குணங்களை ரசித்து மறவாதிருத்தல்

எப்பவும் நம்மைப் படைத்த தாய் தந்தையரை அன்புடன் நினைத்து மகிழ வேண்டும். அன்புக்கு கட்டுப்பட்டு வாழ்க்கை நடத்த வேண்டும். எந்த காரியம் செய்யும் போதும், பேசும் போதும், உறங்கும் போதும், உண்ணும்போதும், இறைவன் இல்லாமல் இவ்வுலகேது? இவ்வுடல் ஏது? இவ்வுயிர் ஏது? இந்த உணவு ஏது? இறை அருள் இல்லையேல் உயிர் உடலில் இயங்குமோ? இந்த நாவும் பாடுமோ? பேசுமோ? என்று வியந்து சதா நேரமும் இறைவனை எண்ணி இறைவனால் படைக்கப் பட்டவற்றை நினைத்து நினைத்து ரசித்து சதா நேரமும் இறைவனின் நாமத்தை சொல்லிக் கொண்டே எந்தக் காரியங்களை யும் செய்ய வேண்டும். இந்த ஜீவாத்மா உன் சொத்து, இதை எப்படி ஆளவும் உனக்கு உரிமை உண்டு என்று எண்ணி நம்மை சரணாகதியாக ஒப்படைக்க வேண் டும். நம்மைப் படைத்த தெய்வத்தை ரசித்திடணும், பிறவியால் வந்த பிணித்தீர மருத்துவன் இனிப்பு மருந்து கசப்பு மருந்து தருவதுபோல், இந்தப் பிறவி என்ற பிணியே தீர்ந்துவிட இறைவனாகிய மருத்து வன் இன்பம் என்ற இனிப்பு மருந்தும், துன்பம் என்ற கசப்பு மருந்தும் தந்துள்ளார் என்று சரணாகதியாகி நம்மை ஒப்படைத்து பகவான் நாமத்தை சொல்லிக் கொண்டே இன்பதுன்பங்களை அனுபவிக்க வேண் டும். இயற்கையின் குணங்களை ரசித்திடணும். படைத்தவன் குணங்களை அடைந்திடணும்.

### 5. கடமையைக் கருத்துடன் செய்தல்

பெண்களுக்கு பதி தர்மம் மிக முக்கியம். பதிக்கு வேண்டியவர்கள் நமக்கு வேண்டியவர்கள் என்று இந்த உலகில் பெண்கள் பதியின் தாய் தந்தை யரையும், கூடப் பிறந்தவர்களையும் குடும்பத்தை யும் அன்புடன் கவனிக்க வேண்டும். கணவன் செல்லும் பாதையில் தவறுதல் இருந்தால் செப்பனிட்டு சமப் படுத்தல் வேண்டும். அதாவது, கணவன் குடும்பத்தின ரிடம் காட்டக் கூடிய அன்பில் குறைவு இருந்தால், அதை நிறைவாக்கி, எப்படி எந்த விதத்தில் அன்பு காட்ட வேண்டுமோ, அந்த விதத்தில் அன்பு காட்ட வேண்டும். பேச்சில், சரீர உதவியில், பணத்தில் இப் படி எல்லாவிதத்திலும் அன்புகாட் வேண்டும். ஆத்ம திருப்தியுடன் செய்யவேண்டும்.

ஆண்களும் தனது தாய் தந்தையர், மனைவி, குடும்பம் எல்லோரிடமும், அன்பைப் பலவிதத்திலும் காட்டிக் கடமைகளைச் செய்ய வேண்டும். பெண்களின் பாசபந்த உணர்வுகளுக்கும், மதிப்பும், அன்பும் காட்டிப் பெண்களை அவர்களது அப்பா அம்மாவைப் பார்க்க வும், முக்கியமான விசேஷங்களுக்கு அனுப்பவும், உதவவும், பரஸ்பரம் மனம் ஒன்றுபட்டு, எது சரி என்று தீர்மானம் செய்து, நல்லதையே செய்யும் மயிலை ஆட்சியாக அன்புக்கு கட்டுப்பட்ட வாழ்க்கையாக நடத்த வேண்டும். இறைவன் நாமத்தை சொல்லிக் கொண்டே எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

''இறைவனைப் பற்றியே இல்லறம் பற்றிடு
குறையேதும் இன்றியே இல்லறம் காத்திடு
நிறைவான இறைவனின் குணமதைக் கொண்டு
மறையோதி மகாஜோதி திருவடி அடைந்திடு
இல்லறம் பற்றியே இறைவனைப் பற்றிடு
நல்லறம் இது என்று உலகுக்கு உரைத்திடு
இல்லத்தலம் அனைத்தும் கோயிலாக்கிடு - என்றும்
இல்லறதர்மத்தை நிலை நாட்டிடு.

பக்கத்திலிருக்கும் அன்பர்களிடம் பாசம் வராமல், பார்க்காத பகவானிடம் எப்படி பாசம் வரும்? பக்கத்தில் உள்ளவர்களிடம், தன்னை அண்டிய தன் தாய் தந்தை, உடன் பிறந்தவர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், இப்படி சிறிது சிறி தாக எல்லோரிடமும் அன்பு காட்டும் பழக்கம் வந்து விடும். மற்ற ஜீவாத்மாக்களிடம் காட்டும் அன்பே பரமாத்மாவிடம் காட்டும் அன்பு. இறைவன் கேட்பது அன்பு ஒன்றுதான். அன்பே இறைவனிடம் சேரும் வழி. அன்பைக் கொடுத்தாலும், அன்பை வாங்கிக் கொண்டாலும், அது அதிகமாக வளரும். இப்படிப் பட்ட வளரும் பூரண அன்பே பூரண சிவ பெருமா னாகும். இவ்வாறு மற்றவர்களிடம் காட்டும் அன்பை தாங்க முடியாமல் இறைவன் உவகைக் கொண்டு, அப்படிப்பட்ட அன்பு உள்ளத்தில் குடிபுகுந்து, கோயில் கொண்டு, அணைத்து மகிழ்வார். அதன் பின்பும் அன்பு தாங்க முடியாமல் அந்த அன்பு ஜீவாத்மாவை அணைத்துக் கொண்டு உடலிலும் குடி




மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் மயிலை தவத்திரு சிவஞானஜோதி சக்தி அம்மையார் எழுதியுள்ள ''அருட்பெருஞ்ஜோதியின் சிறப்பு'' எனும் நூலின் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலய இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு மு.க. பாலசுப்பிரமணியம், பி.ஏ.பி.எல். அவர்கள் இந்நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கினார். தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் நூலை வெளியிட மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலின் துணை ஆணையாளர் / செயல் அலுவலர் திருமதி ந. திருமகள், பி.எஸ்.சி., எம்.எல். அவர்களை நூலின் முதன் படியைப் பெற்றுக் கொண்டார். திருக்கோயில் இதழாசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் வாழ்த்துரை வழங்க இவ்விழா இனிது நடைபெற்றது.

புகுவான். உடலையும் தானாக்கிக் கொள்வான். சிவன் நிலை அருள்வான். இது நிச்சயம், எல்லோருக்குமே ஒரு நாள் கிடைக்கும். நான் கூறிய அறிவுரை வழி முறைப்படி நடந்து வந்தால், அவரவர் குணங்களுக்கும், நம்பிக்கைக்கும், ஆர்வத்துக்கும், பக்திக்கும், சொல்லும் செய்கையும் ஒன்றாய் இருக்கும் நற்குணங்களுக்கும் தகுந்தாற்போல் நிச்சயம் பலன் விரைவில் கிடைக்கும். இது உண்மை, இது இறைவனின் ஆணை. நம்மை படைத்த இறைவன் கேட்பது அன்பு ஒன்றுதான் படைத்த தன் குழந்தைகளையே பண்பட்ட குழந்தைகளாக - அன்புமிக்க குழந்தைகளாகத் தன்னிடம் கேட்கின்றான். அந்த உத்தம குணங்களை பிள்ளைகள் கொண்டால் தாயை அடைதல் சுகம், சுலபம். இறைவனை அடைதலில் குறியாக நின்றால் இறைவனை அடைதல் சுலபம்.

***





முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடான திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 6.7.03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமிகு சோமசுந்தரம் அவர்கள், அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்கள், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப அவர்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு ஆர். முத்துசாமி, பி.எஸ்.சி., பி.எல் அவர்கள் திருக்குட நீராட்டு விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்து இருந்தார்கள்.

 பதிவு எண். TN/PMG (CCR) / 707 / 03-05/WPP No 451



முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடான திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 6.7.03 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமிகு சோமசுந்தரம் அவர்கள், அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்கள், அறநிலையத் துறையின் சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயிலின் இணை ஆணையாளர் / நிர்வாக அதிகாரி திருமிகு ஆர். முத்துசாமி, பி.எஸ்.சி., பி.எல் அவர்கள் திருக்குட நீராட்டு விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்து இருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை – 600 034.

ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை – 600 014.